
பாவங்களிலிருந்து! வியாதிகளிலிருந்து! பிரச்சனைகளிலிருந்து!

# இயேசு விடுவிக்கிறார்

மரம் : 38 கனி : 1 ஜனவரி - 2017

சகோ. மோகன் சி. லாசரஸ்



2017

**கர்த்தரே**
**உனக்கு நித்திய**
**வெளிச்சமாயிருப்பார்;**
**உன் துக்கநாட்கள்**
**முடிந்துபோம்.**

ஏசாயா 60:20.

# உங்கள் சகோதரனிடமிருந்து...



இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில், உங்களுக்கு என் அன்பின் **புத்தாண்டு வாழ்த்துக்கள்!**

இந்தப் புத்தாண்டு உங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும்படி, உங்களுக்காக, உங்கள் குடும்பத்திற்காக ஜெபிக்கிறேன். இந்த ஆண்டிற்காக கர்த்தர் உங்களுக்குக் கொடுத்திருக்கும் வாக்குத்தத்தம்: **“கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சமாயிருப்பார். உன் துக்க நாட்கள் முடிந்துபோம்.”** ஏசாயா 60:20.

கர்த்தர் உங்களுக்கு வாக்குக் கொடுத்தபடி, அவர் உங்களுக்கு வெளிச்சமாக இருந்து, உங்கள் துக்கங்களை மாற்ற ஜெபிக்கிறேன். இதுவரை உங்களை தொடர்ந்து வந்த, **உங்களை துக்கப்படுத்திய காரியங்களில் மாற்றங்களைக் காண்பீர்கள்.**

**தினமும் வாக்குத்தத்தத்தைச் சொல்லி ஜெபியுங்கள். தினமும் குடும்பமாக ஜெபியுங்கள்.** கர்த்தருடைய வெளிச்சத்தின் ஆசீர்வாதங்கள், உங்கள் குடும்பத்தில் நிச்சயமாகவே உண்டாகும்.

கடந்த வருடமெல்லாம், நம் ஊழியத்திற்காக ஜெபித்தீர்கள், கொடுத்தீர்கள். உங்கள் ஜெபத்தினாலும், தியாகமான உங்களுடைய காணிக்கையினாலும், ஊழியங்களை கர்த்தர் ஆசீர்வாதமாக நடத்தினார். ஜெபித்த, கொடுத்த, உங்களுக்காக கர்த்தரை **துதிக்கிறேன்!**

இந்த 2017ம் வருடத்திலும், கர்த்தர் அனேக ஊழியங்களைச் செய்ய கட்டளையிட்டிருக்கிறார். அவைகளை எல்லாம் செய்து முடிக்க, **உங்கள் ஜெபமும், உதவியும் அதிகம் தேவை.**

**தினமும்** ஒரு **5 நிமிடங்கள்,** நம் **‘இயேசு விடுவிக்கிறார்’ ஊழியங்களுக்காக, எனக்காக** நீங்கள் ஜெபித்தாலே, கர்த்தர் நம் ஊழியத்தில் பெரிய காரியங்களைச் செய்வார்! **ஜெபிப்பீர்களா?**

கர்த்தர் வாக்குக் கொடுத்த, தமிழ்நாட்டின் எழுப்புதல் சமீபித்து விட்டது! எழுப்புதலுக்கான தடைகளை எல்லாம் கர்த்தர் அப்புறப்படுத்திக் கொண்டிருக்கிறார். நாம் இப்போது, **இன்னும் தீவிரமாக ஜெபிக்க வேண்டும், செயல்பட வேண்டும்.**

முதல் நூற்றாண்டு எழுப்புதல், எருசலேம் பட்டணத்தில் ஆரம்பித்து, உலகம் முழுவதும் பரவிற்று. இந்த கடைசிக் கால எழுப்புதல், இந்தியாவின் எருசலேமாகிய **சென்னைப்** பட்டணத்தில் ஆரம்பித்து, உலகம் முழுவதும் பரவும்!

இந்த தேவனுடைய திட்டம் துரிதமாக நிறைவேற, **நாம் கருத்தாக ஜெபிக்க வேண்டும்.** சென்னைப் பட்டணத்தின் எழுப்புதலுக்காக, கர்த்தர் கொடுத்த பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம். இந்த ஆண்டிலும், சென்னைப் பட்டணத்தில் நிறைவேற்ற வேண்டிய அனேக ஜெப மற்றும் ஊழியத் திட்டங்களை கர்த்தர் கொடுத்திருக்கிறார். இதற்காக **ஜெபியுங்கள்.**

**“விசுவாசிகள் ஒவ்வொருவரும்** சீஷர்களாக மாறி, **ஆத்துமாக்களை ஆதாயப் படுத்துகிறவர்களாக வேண்டும்.”** என்று கர்த்தர் விரும்புகிறார். இதற்காக, தமிழ்நாட்டில் ஒரு லட்சம் தேவ பிள்ளைகளை **சீஷர்களாக மாற்றும் திட்டத்தை** (DISCIPLE OF JESUS), கர்த்தர் கொடுத்திருக்கிறார். அனேகர் இந்தத் திட்டத்தில் இணைந்து, செயல்பட ஆரம்பித்திருக்கிறார்கள்.

உங்கள் ஜெபமும், உதவியும் அதிகம் தேவை.

அப்படியே 10,000 வாலிபர்களை, **இயேசுவின் போர்ச் சேவகராக** (SOLDIER OF JESUS) உருவாக்கி, அவர்கள் மூலமாக ஆத்துமாக்களை ஆதாயம் செய்யும் திட்டத்தையும் கர்த்தர் கொடுத்திருக்கிறார். இதற்குள் சுமார் 2,000க்கும் அதிகமான வாலிபர்கள் இந்தத் திட்டத்தில் இணைந்திருக்கிறார்கள்.

**நீங்களும் ஆத்துமாக் களை ஆதாயம் பண்ண வேண்டும்** என்று கர்த்தர் விரும்புகிறார். நீங்களும் இத்திட்டத்தில் இணைந்து ஊழியம் செய்யலாம். இயேசு கிறிஸ்துவின் பிரதானமான கட்டளையை நிறைவேற்றுவதுதான் நம்முடைய மிக முக்கியமான பணி. இதற்காகத்தான் ‘இயேசு விடுவிக்கிறார்’ ஊழியம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இதற்காக, கடந்த 7 மாதங்களில் மாத்திரம், சுமார் ₹ 20 லட்சம் மதிப்பில், 20 லட்சம் கைப் பிரதிகளை அச்சடித்து வினியோகித்திருக்கிறோம்.

இந்த ஆண்டில், இன்னும் மிகத் தீவிரமாக சுவிசேஷத்தை அறிவிக்க, கர்த்தர் அனேக திட்டங்களைக் கொடுத்திருக்கிறார். நம்முடைய சுவிசேஷ ஊழியக் குழுவினர் கிராமங்கள்தோறும் சென்று செய்த சுவிசேஷ ஊழியத்தின் மூலமாக, ஆயிரக்கணக்கான ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டு இருக்கிறார்கள். இந்த ஆண்டில், இன்னும் திரளான ஆத்துமாக்கள் இரட்சிக்கப் படுவார்கள். இதற்காக **ஜெபியுங்கள்.**

**ஒவ்வொரு மாதமும் கொழும்பு பட்டணத்தில் நடைபெற்று வரும் திறப்பின் வாசல் ஜெபத்தை தேவன் அற்புதமாக நடத்தி வருகிறார்.**

**கட்டாயமாக இந்த ஜெபத்தில் நீங்கள் கலந்து கொண்டு தேசத்திற்காக ஜெபிக்க அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இலங்கை தேசத்திலே நாம் செய்து வருகிற ஊழியங்களுக்காக ஜெபித்து, கொடுத்து தாங்கி வருகிற உங்களை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதிக்க ஜெபிக்கிறேன்.**


நீங்கள், இந்த கர்த்தருடைய ஊழியத்தில் என்னோடு இணைந்து நிற்பதுதான், எனக்கு பெரிய ஒரு பெலன்! நாம் சேர்ந்து தேவனுடைய இராஜ்ஜியத்தைக் கட்டி வருகிறோம். பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்.

நாம் சேர்ந்து **ஜெபிப்போம்!** சேர்ந்து **செயல்படுவோம்!** கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை சந்தோஷப்படுத்துவோம்!

கிருபை உங்களோடிருப்பதாக!

உங்கள் சகோதரன்,

Mohan C L




நம்முடைய தேவன், வாக்குத்தத்தங்களின் தேவன்! வாக்கு மாறாத தேவன்! வாக்கை நிறைவேற்றுவதில் உண்மையுள்ள தேவன்! (எபி. 10:23).

பரிசுத்த வேதாகமத்தில், ஏராளமான வாக்குத்தத்தங்கள் தேவனால் கொடுக்கப்பட்டிருக்கிறது. 'அவைகள் எல்லாம் நமக்குரியதுதான்!' என்றாலும், ஒரு குறிப்பிட்ட வேளையில், ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக, அவைகளில் ஒரு வாக்குத்தத்தத்தை, நமக்கென்று தேவன் பிரத்தியேகமாகத் தருகிறார்.

"இந்த வாக்குத்தத்தம், எனக்குரியதுதான்!" என்று விசுவாசித்து, அந்த வாக்குத்தத்தத்தைச் சொல்லி நாம் ஜெபித்தால், அந்த வாக்குத்தத்தத்தின் ஆசீர்வாதம் நமக்கு உண்டாகும்!

40 ஆண்டுகளுக்கு முன்பாக, கர்த்தர் என்னை ஊழியத்திற்கு அழைத்தபோது, பரிசுத்த வேதாகமத்திலுள்ள சில வாக்குத்தத்தங்களை என் ஊழியத்திற்கென்று பிரத்தியேகமாகக் கொடுத்தார். அந்த வாக்குத்தத்தங்களின்படியே, இன்றுவரை கர்த்தர் என்னை ஆசீர்வதித்து நடத்துவதை என் ஊழியத்தின் பாதையில், நான் அனுபவிக்கிறேன்.

காரணம், கர்த்தர் எனக்கென்று கொடுத்த வாக்குத்தத்தத்தை நான் அடிக்கடி சொல்லிச் சொல்லி ஜெபிப்பேன். அந்த வாக்குத்தத்தத்தின் ஆசீர்வாதங்களை என் வாழ்க்கையிலும், என் ஊழியத்திலும் நான் பார்க்கிறேன்.

இன்று, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உங்களுக்குக் கொடுக்கும் இந்த வாக்குத்தத்தத்தை, விசுவாசத்தோடு உங்களுக்கென்று நீங்கள் சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும். அப்பொழுது, அந்த வாக்குத்தத்தத்தின் ஆசீர்வாதங்களை உங்கள் வாழ்க்கையில் நீங்கள் அனுபவிப்பீர்கள்.

நம் **'இயேசு விடுவிக்கிறார்'** ஊழியத்தில் தொடர்புடைய தேவ பிள்ளைகளுக்காக, அவர்களுடைய குடும்பங்களுக்காக நான் விசேஷமாக ஜெபிப்பதுண்டு. நம் 'இயேசு விடுவிக்கிறார்' பத்திரிக்கையை வாசிக்கிறவர்கள், நம் டி.வி. நிகழ்ச்சிகளைப் பார்க்கிறவர்கள், திறப்பின் வாசல் ஜெபத்தில் கலந்து கொள்கிறவர்கள், இந்த ஊழியங்களுக்காக ஜெபிக்கிறவர்கள், கொடுக்கிறவர்கள் போன்ற யாவருக்காகவும் நான் ஜெபிக்கும்போது, கர்த்தர் கொடுக்கும் வாக்குத்தத்தத்தை அவர்களுக்குத் தெரிவித்து ஜெபிப்பது, பல வருடங்களாக என் வழக்கமாக இருந்து வருகிறது.

இந்தப் புது வருடத்திற்காக, உங்களுக்காக நான் ஜெபித்தபோது, கர்த்தர் உங்களுக்கென்று கொடுத்த வாக்குத்தத்தம்:

**"கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சமாயிருப்பார்; உன் துக்கநாட்கள் முடிந்துபோம்."** ஏசாயா 60:20.

இந்த வாக்குத்தத்தத்தை கர்த்தர் சொன்னபோது, என் உள்ளம் மகிழ்ந்து களிகூர்ந்தது.

கர்த்தருடைய வெளிச்சம் உங்கள் வாழ்க்கையில் உதிப்பதினால், **உங்கள் துக்க நாட்கள் முடிந்து போகும்!**

**இதுவரை உங்களை துக்கப்படுத்திய காரியங்களுக்கு, கர்த்தர் ஒரு முடிவை உண்டாக்கப் போகிறார்!**



உங்கள் வாழ்க்கையில், ஏதோ ஒரு காரியம் உங்களை துக்கப்படுத்திக் கொண்டிருக்கிறது! அது, உங்கள் வீட்டாரைக் குறித்ததாக இருக்கலாம்! உங்கள் வருமானத்தைக் குறித்ததாக இருக்கலாம்! உங்கள் வியாபாரம், அல்லது தொழிலைக் குறித்ததாக இருக்கலாம்! உங்கள் தேவைகளைக் குறித்த, அல்லது கடன் பிரச்சனைகளைக் குறித்ததாக இருக்கலாம்! உங்கள் வியாதியைக் குறித்ததாக இருக்கலாம்! உங்கள் ஊழியத்தைக் குறித்ததாக இருக்கலாம்!

இப்படியாக, ஏதோ ஒரு காரியம் உங்கள் உள்ளத்தின் ஆழத்தில் துக்கத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. ஒரு பக்கம் இரட்சிப்பின் சந்தோஷமும், பரிசுத்த ஆவியின் நிறைவின் மகிழ்ச்சியும் இருந்தாலும், மற்றொரு பக்கம் ஏதோ ஒரு துக்கம் உங்களுக்கு வேதனையைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

கர்த்தர் உங்களுக்குச் சொல்கிறார்: **"உன் துக்கநாட்கள் முடிந்துபோம்!"** (ஏசாயா 60:20). உங்கள் துக்கம் மாறும்படியான ஒரு அற்புதம், உங்களுக்கு நடக்கும். அற்புதராகிய இயேசு கிறிஸ்து, இந்த அற்புதத்தை உங்களுக்குச் செய்வார்.

அதற்காக, கர்த்தரே உங்களுக்கு வெளிச்சமாக உதிப்பார்.

**"இதோ, இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும்; ஆனாலும் உன்மேல் கர்த்தர் உதிப்பார்; அவருடைய மகிமை உன்மேல் காணப்படும்."** (ஏசாயா 60:2) என்று கர்த்தர் உங்களுக்குச் சொல்கிறார்.

தேசத்திலே இருள் மூடும்! இருளான நாட்களை ஜனங்கள் காணபார்கள்! பயங்கரமான இருளின் சம்பவங்கள் தேசத்தில் உண்டாகும்! பயங்களும், குழப்பங்களும் மனிதருடைய உள்ளத்தைக் கவ்வும்! "என்ன செய்வது?" என்று ஜனங்கள் திகைப்பார்கள்!

ஆனாலும், **"...கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சமும், உன் தேவனே உனக்கு மகிமையுமாயிருப்பார்."** (ஏசாயா 60:19) என்று பரிசுத்த வேதாகமம் சொல்கிறது.

கர்த்தராகிய தேவனே உங்களுக்கு வெளிச்சமாக இருந்து, அந்த இருள் உங்களைக் கவ்வாதபடி பாதுகாத்து நடத்துவார்.

உங்கள் வாழ்க்கையில், உங்கள் வீட்டில், கர்த்தருடைய வெளிச்சம் உண்டாகும். இருளின் பயங்கரங்கள் உங்களை எதுவும் சேதப்படுத்த முடியாது. உங்களைச் சுற்றிலும் எத்தனை பயங்கரங்கள் நடந்தாலும், உங்கள் குடும்பத்தில் எந்த விதமான சேதமும் உண்டாகாது.

காரணம், கர்த்தரே உங்களுக்கு வெளிச்சமாக இருப்பார். கர்த்தர் வெளிச்சமாகப் பிரகாசிக்கிற இடத்தில், இருள் பிரவேசிக்க முடியாது.

ஆகவே, கர்த்தருடைய வெளிச்சம் உங்கள் வாழ்க்கையில் பிரகாசிக்க இடம் கொடுங்கள்! கர்த்தருடைய வெளிச்சம் உங்கள் வாழ்க்கையில் வந்து விட்டால், இருள் தானாக விலகி மறைந்து போகும்! உங்கள் வாழ்க்கையில் கர்த்தருடைய வெளிச்சம் வந்ததும், உங்களைத் துக்கப்படுத்துகிற இருள் விலகி மறைந்து போகும்.

**உங்கள் துக்க நாட்கள் முடிந்து போகும்!**

எவ்விதமான இருளின் ஆதிக்கங்கள் மனிதனை துக்கப்படுத்துகிறது? அதிலிருந்து கர்த்தரின் வெளிச்சம் எப்படி ஜெயம் கொடுக்கிறது? எப்படி துக்கத்தை மாற்றுகிறது? என்பதைப் பற்றி, வேத வசனத்தின் வெளிச்சத்தில் நாம் தியானிக்கலாம்!


உங்கள் வாழ்க்கையில் எந்தப் பகுதியில் இருள் இருக்கிறது? "என்ன இருள் விலகினால் துக்கம் மாறும்?" என்பதை நீங்கள் அறிந்து, கர்த்தரிடத்தில் வேண்டிக் கொள்ளும்போது, அவர் உங்கள் துக்கத்தை சந்தோஷமாக மாற்றுவார்.

**இந்த 2017ம் ஆண்டு,**
**உங்களுக்கு**
**வெளிச்சத்தின் ஆண்டு!**
**உங்கள் துக்கம்**
**நீங்குகிற ஆண்டு!**
**உங்களுக்கு**
**சந்தோஷத்தின் ஆண்டு!**
**உங்களுக்கு**
**ஆசீர்வாதத்தின் ஆண்டு!**

# பாவ இருள் விலகும்!

கர்த்தருடைய வெளிச்சம் உதிக்கும்போது, **பாவ இருள்** தானாக விலகிப் போகும்!

பாவமும், பாவப் பழக்க வழக்கங்களும், ஒரு இருளாக, மனிதனுடைய வாழ்க்கையைப் பாதிக்கிறது. விசேஷமாக, மனிதனுடைய சந்தோஷத்தைக் கெடுக்கிறது.



ஆகவேதான், பாவிகளின் இரட்சகராக இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வந்தபோது, **"நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்."** என்றார். **(யோவான் 9:5).**

**"இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்;"** (மத்தேயு **4:15**) என்று, இயேசு கிறிஸ்துவைக் குறித்து பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

இன்றும் இருளில் இருக்கும் மக்களை, இயேசு கிறிஸ்து வெளிச்சத்தின் பிள்ளைகளாக மாற்றுகிறார்.

ஒரு சமயம், ஒரு குறிப்பிட்ட பட்டணத்திலிருந்து ஒரு சகோதரர் என்னைப் பார்க்க வந்தார். "ஐயா, சில நாட்களுக்கு முன்பு, தற்செயலாக உங்கள் கூட்டம் நடக்கிற இடத்திற்கு வந்தேன். நீங்கள் சொன்ன வேத வசனங்கள் என் உள்ளத்தைத் தொட்டது. 'நான் ஒரு பாவி!' என்பதை உணர்ந்தேன். அந்த நாள்முதல், என் நிம்மதியே போய் விட்டது. என்னால் நிம்மதியாக தூங்கக் கூட முடியவில்லை.

என் பாவங்கள், என் மனசாட்சியை வாதிக்கிறது. என்னால் அந்தப் பாவங்களை விடவும் முடியவில்லை. பல வருடங்களாக நான் செய்து வருகிற அந்தப் பாவங்களை ஒரே நாளில் எப்படி விட முடியும்? 'என்ன செய்வது?' என்று எனக்குத் தெரியவில்லை. ஆகவேதான் நான் உங்களைத் தேடி வந்தேன்." என்றார்.

நான் அவரிடத்தில், "நீங்கள் அந்தப் பாவங்களை விட்டு விட விரும்புகிறீர்களா?" என்று கேட்டேன். அதற்கு அவர், "ஆம், விட்டு விட விரும்புகிறேன். ஆனால், என்னால் முடியவில்லையே!" என்று, மிகுந்த வேதனையோடு சொன்னார்.

அதற்கு நான், "உங்களால் விட முடியாது. ஆனால், இயேசு கிறிஸ்துவால் உங்களுக்கு விடுதலை கொடுக்க முடியும்! அவரை உங்கள் உள்ளத்தில் இரட்சகராக ஏற்றுக் கொள்ளுங்கள். இயேசு கிறிஸ்துவாகிய வெளிச்சம் உங்கள் வாழ்க்கையில் வரும்போது, அந்தப் பாவ இருள் உங்களை விட்டுத் தானாக விலகிப் போகும்." என்று சொன்னபோது, என்னோடு கூட முழங்கால்படியிட்டு, கண்ணீரோடு தன் பாவங்களை எல்லாம் அறிக்கை செய்து ஜெபித்து, இயேசு கிறிஸ்துவை தன் வாழ்க்கையில் ஏற்றுக் கொண்டார்.

"இயேசுவே, என் பாவங்களை மன்னியும். என்னை இந்தப் பாவப் பழக்கங்களிலிருந்து விடுதலையாக்கும்! என் உள்ளத்தில் வாரும்." என்று சொல்லி அவர் ஜெபித்தபோது, ஒரு அற்புதம் நடந்தது.

ஜெபித்து முடித்தபோது, அவருடைய முகத்தில் ஒரு பிரகாசம் காணப்பட்டது. ஒரு சந்தோஷம் அவருடைய முகத்தில் தெரிந்தது. பாவ பாரம் தன்னை விட்டு விலகிப் போனதை சந்தோஷமாகச் சொன்னார்.

பாருங்கள், இயேசு கிறிஸ்துவாகிய வெளிச்சம் அவருடைய வாழ்க்கையில் வந்ததும், இருள் தானாக விலகிப் போனது. அதன் பிறகு, அந்தப் பாவங்கள் அவருடைய வாழ்க்கையில் இல்லை. இதுதான் இயேசு கிறிஸ்து செய்கிற மிகப் பெரிய அற்புதம்.

இந்த அற்புதம் உங்களுக்கு நடந்திருக்கிறதா? பாவ இருள் உங்களை விட்டு விலகியிருக்கிறதா?

இன்றைக்கு, இப்பொழுது, இயேசு கிறிஸ்துவாகிய ஒளி உங்களை சந்தித்துக் கொண்டிருக்கிறது! இருளாக இருக்கிற உங்கள் வாழ்க்கையை வெளிச்சமாக மாற்ற இயேசு கிறிஸ்து விரும்புகிறார். அவருக்கு உங்கள் வாழ்க்கையில் இடம் கொடுங்கள்.

"என் பாவங்கள் பெரிது! பல வருடங்கள் பாவப் பழக்கம்! அதை மாற்றவே முடியாது." என்று எண்ணுகிறீர்களா?

**"அவருக்குள் (இயேசுவுக்குள்) ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது. உலகத்திலே வந்து எந்த**

மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி." (யோவான் 1:4,9) என்று, இயேசு கிறிஸ்துவைக் குறித்து பரிசுத்த வேதாகமம் சொல்கிறது.

எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற வல்லமை, இயேசு கிறிஸ்துவாகிய ஒளிக்கு உண்டு. அந்த ஒளி வந்து விட்டால், இருள் தானாக விலகிப் போய் விடும். இயேசு கிறிஸ்துவாகிய ஒளி உங்கள் வாழ்க்கையில் வந்து விட்டால், உங்கள் பாவ இருள் எத்தனை பெரிதாக இருந்தாலும், உங்களை விட்டு விலகிப் போய் விடும்.

இயேசு கிறிஸ்துவே மெய்யான ஒளி! **(யோவான் 1:9).**

இந்த உலகத்தில், பொய்யான, மனுஷனை ஏமாற்றுகிற ஒளியும் உண்டு. "சாத்தான் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக் கொண்டு, தன்னை ஒரு ஒளியாகக் காண்பித்து, மனிதர்களை ஏமாற்றுவான்." என்று பரிசுத்த வேதாகமம் சொல்கிறது. **(2 கொரி. 11:14).**

மனிதர்களால் உண்டாக்கப்பட்டு, "இது தெய்வ ஒளி!" என்று சொல்லி, மனிதர்களை ஏமாற்றுகிறதும் உண்டு. இப்படிப்பட்ட ஒளியினால் மனிதனுடைய வாழ்க்கையில் வெளிச்சம் வருவதில்லை. இது பொய்யான ஒளி. ஆனால், இயேசு கிறிஸ்து ஒருவர் மாத்திரமே, மனிதர்களின் வாழ்க்கையை பிரகாசிக்கச் செய்கிற மெய்யான ஒளி!

திருநெல்வேலி மாவட்டம் – **'அத்தியூத்து'** என்கிற ஒரு கிராமத்தைச் சார்ந்த ஒரு வாலிபன், **லெனின்.** அவர் தன்னுடைய 14வது வயதிலேயே போதைப் பழக்க வழக்கங்களில் சிக்கி, பாவத்திற்கு அடிமையாகி விட்டார். 16 வருடங்களாக இருந்த அவருடைய குடிப் பழக்கமும், புகை பிடிக்கும் பழக்கமும், அவருடைய வாழ்க்கையை இருளாக மாற்றி விட்டன.

அவருடைய உள்ளத்தில் சமாதானம் இல்லை. அவருடைய வாழ்க்கையில் நிம்மதியில்லை. தன்னுடைய பாவப் பழக்கங்களை அவரால் விடவும் முடியவில்லை.

"மலையில் தோன்றுகிற 'தீப ஒளி'யைப் பார்த்தால், பாவ இருள் விலகும்!" என்று எண்ணி, மிகுந்த பக்தியோடு விரதம் இருந்து, தான் வசித்த அந்தக் கிராமத்திலிருந்து சுமார் 200 கி.மீ. தூரத்திலிருந்த அந்த மலைக்கு கால் நடையாகவே சென்று, 'அந்த ஒளி'யை தரிசித்து விட்டு வந்தார்.

1998ம் ஆண்டுமுதல், 2009ம் ஆண்டுவரை, 11 ஆண்டுகள் தொடர்ந்து கால் நடையாகவே நடந்து சென்று, அந்த ஒளியை அவர் தரிசித்து வந்தபோதும், அவருடைய வாழ்க்கையில் இருந்த பாவ இருள் விலகவில்லை. தன் உள்ளத்திற்குள் நிம்மதி இல்லாமல், குடும்பத்திலும் ஆசீர்வாதம் இல்லாமல் தவித்தார்.

இப்படிப்பட்ட சமயத்தில்தான், 2009ம் வருடம் இயேசு கிறிஸ்துவாகிய மெய்யான ஒளி அவரை சந்தித்தது. இயேசு கிறிஸ்துவின் வெளிச்சம், அவருடைய வாழ்க்கையில் வந்ததும், ஒரே நாளில் அத்தனை பாவப் பழக்கங்களும் அவரை விட்டு ஓடி மறைந்து போய் விட்டன. அவருடைய வாழ்க்கையில் பரிசுத்தமும், நிம்மதியும், ஆசீர்வாதமும் கிடைத்தது. இன்றைக்கு மிக சந்தோஷமான வாழ்க்கை வாழ்ந்து வருகிறார்.

11 வருடங்களாக தொடர்ந்து நடந்து சென்று, அந்த ஒளியை அவர் தரிசித்து வந்தபோதும், அவருடைய வாழ்க்கையில் காணப்பட்ட பாவ இருள் விலகவில்லை. காரணம், அவர் மலையில் போய் தரிசித்து வந்தது, மனிதர்களால் காண்பிக்கப்பட்ட பொய்யான ஒளி!

ஆனால், அவருடைய வாழ்க்கையில் மெய்யான ஒளியாகிய இயேசு கிறிஸ்து வந்ததும், அவருக்குள் இருந்த எல்லா பாவ இருளும் தானாகவே விலகிப் போயிற்று.

'கடவுள் ஒளியாக இருக்கிறார்!' என்று எல்லோரும் நம்புகிறபடியினால், சாவுக்கேதுவான மனிதர்களில் சிலரும் தங்களை ஒளியாகக் காண்பித்து, மனிதர்களை ஏமாற்றுகிறார்கள். மரித்து, மண்ணுக்குள் போன எவனொருவனும் மெய்யான ஒளியாக இருக்கவே முடியாது. ஆனால், சாத்தான் சில மனிதர்களை ஒளியாகக் காண்பித்து, அவர்களை வஞ்சித்து, வழி தப்பப் பண்ணுகிறான்.

எனக்கு அன்பானவர்களே, இன்றைக்கு நீங்கள் நம்புகிற ஒளி, மெய்யான ஒளியா?, அல்லது பொய்யான ஒளியா? என்று, சற்று சோதித்து அறியுங்கள்.

இயேசு கிறிஸ்துவாகிய மெய்யான ஒளி, இன்றைக்கு உங்களை சந்தித்துக் கொண்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவாகிய வெளிச்சம் உங்கள் வாழ்க்கையில் வரும்போது, பாவத்தினால் உண்டான உங்கள் துக்கம் முடிந்து போகும்!

**உங்கள் வாழ்க்கையே வெளிச்சமாக மாறும்! உங்கள் வாழ்க்கையில் சந்தோஷமும்,**

# சாப இருள் நீங்கும்!

இன்றைக்கு, பல குடும்பங்களைப் பாழாக்குகிற ஒரு இருள், **சாப இருள்!** "சாபத்தினால்தான் நாம் பாதிக்கப்பட்டிருக்கிறோம்!" என்பதை அறியாமலேயே, அனேகக் குடும்பங்கள் சாப இருளினால் தத்தளித்துக் கொண்டிருக்கிறது.

இது, மனிதர்களின் கண்களுக்குத் தெரியாத இருள்! அனேகரால் விளங்கிக் கொள்ள முடியாத இருள்!

எனக்கு ஒரு குடும்பத்தினரை தெரியும். அவர்களுக்கு ஏராளமான சொத்துக்களும், வருமானமும் உண்டு. என்றாலும், அவர்களுக்கு எவ்வளவு வருமானம் வந்தாலும், அந்த வீட்டில் ஆசீர்வாதம் தங்குவதே இல்லை. காலையில் பெரிய அளவில் வருமானம் வரும். ஆனால், அன்று மாலையிலேயே ஒரு 100 ரூபாய்க்காக அடுத்த வீட்டில் போய் கடன் வாங்க வேண்டிய நிலை இருக்கும்!



வருகிற வருமானம் எல்லாம் என்ன ஆகிறது? பொத்தல் பையில் போட்டதைப் போல போய் விடும். வெளியிலிருந்து பார்க்கிறவர்கள், "இவர்கள் பெரிய பணக்காரர்கள்! இவர்களுக்கு என்ன குறை?" என்றுதான் சொல்வார்கள்.

ஆனால், அவர்களுடைய வீட்டில் தரித்திரம் தாண்டவமாடியது. எல்லாம் இருந்தும், தரித்திரம்! ஆசீர்வாதம் இல்லை! அவர்களுக்கே, "இது ஏன்?" என்று விளங்கவில்லை. எந்நாளும் துக்கம்தான்!

சாபம் அந்தக் குடும்பத்தைப் பாதித்திருந்தது. சாப இருள் அந்தக் குடும்பத்தை சூழ்ந்திருந்தது. ஒருநாள், அதை அவர்கள் கண்டுபிடித்தார்கள். ஆனால், அந்த "சாபத்திலிருந்து விடுதலை பெறுவது எப்படி?" என்று அவர்களுக்கு தெரியவில்லை. இயேசு கிறிஸ்துவை அறியாத அந்தக் குடும்பத்தினர், சாபத்திற்கான எத்தனையோ பரிகாரங்களைச் செய்து பார்த்தார்கள். எந்தப் பரிகாரமும் வேலை செய்யவில்லை! துக்கத்திலிருந்து அவர்களால் விடுதலை பெற முடியவில்லை!

அந்த சமயத்தில்தான், "சாபத்திற்குப் பரிகாரம், இயேசு கிறிஸ்து ஒருவர்தான்!" என்பதை அறிந்தார்கள். இயேசு கிறிஸ்துவை தங்கள் வீட்டில் அவர்கள் ஏற்றுக் கொண்டபோது, அவருடைய வெளிச்சம் அந்த வீட்டில் உதித்தது. இயேசு கிறிஸ்துவாகிய வெளிச்சம் வந்ததும், அந்த வீட்டிற்குள் இருந்த சாப இருள் நீங்கிப் போனது. தங்கள் வீட்டிற்குள் மாற்றம் உண்டானதைக் கண்டார்கள். சாபம் ஆசீர்வாதமாக மாறியது. (உபா. 23:5). பணக் கஷ்டமும், தரித்திரமும் நீங்கியது.

இன்று, உங்கள் குடும்பத்தில் இந்த விதமான சாபம் காணப்படுகிறதா? சாப இருளில் சிக்கித் தத்தளிக்கிறீர்களா?

இயேசு கிறிஸ்துவே உங்களுக்கு வெளிச்சம்! இன்றைக்கு உங்கள் வீட்டிலுள்ள சாப இருள் விலகும்! இயேசு கிறிஸ்துவாகிய வெளிச்சம் உங்கள் வீட்டிற்குள் வரும்போது, அந்த சாப இருள் உங்கள் வீட்டை விட்டு வெளியேறும். உங்கள் துக்க நாட்கள் முடிந்து போகும்.

ஒரு சமயம், ஒரு தம்பதியினர் என்னைப் பார்க்க வந்தார்கள். அப்பொழுது அவர்கள், தங்கள் வாழ்க்கையில் நடந்த ஒரு அதிசயத்தை மிகுந்த மகிழ்ச்சியோடு இப்படியாக என்னிடத்தில் சொன்னார்கள்:

அவர்கள் பெரிய செல்வந்தர்கள். நல்ல வருமானத்தோடு, மிகவும் செழிப்பாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இயேசு கிறிஸ்துவின் சிலையையும், அவருடைய தாயாகிய மரியாளின் சிலையையும் வைத்து, அவர்கள் மிகுந்த பக்தியாக வணங்கி வந்தார்கள்.

திடீரென்று அவர்களுடைய தொழிலில் ஒரு சரிவு ஏற்பட்டது. நஷ்டத்திற்கு மேல் நஷ்டம் உண்டாயிற்று. அவருடைய மனைவி ஒரு கொடிய நோயினால் தாக்கப்பட்டார்கள். அவர்களுடைய குடும்ப டாக்டர், முழுமையாகப் பரிசோதித்துப் பார்த்தபோது, அவர்களுடைய இருதயம், நுரையீரல், கர்ப்பப் பை போன்ற பல உள் உறுப்புகள் பாதிக்கப்பட்டு, ஏழு விதமான நோயினால் தாக்கப்பட்டிருப்பதைக் கண்டுபிடித்தார். தினந்தோறும் ஒரு கை நிறைய மாத்திரைகளை சாப்பிட வேண்டிய நிலை அவர்களுக்கு உண்டானது.

அவர்களுடைய சந்தோஷமெல்லாம் ஓடி மறைந்தது! துக்கம் குடும்பத்தைச் சூழ்ந்து கொண்டது! "ஏன் இப்படி நடக்கிறது?" என்று எண்ணி, கலங்கினார்கள்.

"யாரோ நமக்கு பில்லி–சூனியம் வைத்து விட்டார்கள். ஆகவேதான், நமக்கு இந்தப்

போராட்டம்!" என்று எண்ணினார்கள். தங்களுக்கு இருந்த சொத்துக்களை, தொடர்ந்து இழக்க ஆரம்பித்தார்கள். துக்கத்திற்கு மேல் துக்கம் உண்டானது. "என்ன செய்வது?" என்று தெரியாமல், அவர்கள் தடுமாறிய சமயத்தில், நாலுமாவடியில் நடைபெறுகிற திறப்பின் வாசல் ஜெபத்தைக் குறித்துக் கேள்விப்பட்டு, அந்த ஜெபத்தில் கலந்து கொண்டார்கள்.

அன்றைய தினம் சாபத்தைக் குறித்தும், சாபத்திலிருந்து விடுதலை பெறுவதைக் குறித்தும் பிரசங்கிக்கப்பட்ட தேவ செய்தியானது, அவர்களுடைய ஆவிக்குரிய கண்களைத் திறந்தது. "யாரோ நமக்கு விரோதமாக மந்திரவாதம் செய்ததினால்தான் நாம் பாதிக்கப்பட்டிருக்கிறோம்." என்று நினைத்துக் கொண்டிருந்த அவர்கள், "இது மந்திரவாதத்தினால் உண்டான பாதிப்பு அல்ல. நம்முடைய பாவத்தினால் உண்டான சாபத்தின் பாதிப்புதான்!" என்பதை அறிந்து கொண்டார்கள்.

வேத வசனத்தின் வெளிச்சத்தில், சாபமான காரியங்களை அறிந்து, அவர்கள் மனந்திரும்பினார்கள். விக்கிரக வணக்கப் பாவத்தை விட்டார்கள். தங்களுடைய பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்பட, அவைகளை அறிக்கையிட்டு, சாபம் நீங்க அவர்கள் ஜெபித்தபோது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அவர்களுடைய பாவங்களை எல்லாம் மன்னித்து, சாபத்தை நீக்கி, அவர்களை மகிழச் செய்தார். அவர்களுடைய சாபத்தை கர்த்தர் ஆசீர்வாதமாக மாற்றினார்.

அவர்கள் இந்த அனுபவத்தை என்னிடத்தில் சொன்னபோது, "சாபம் நீக்கப்பட்டது.' என்று எப்படிச் சொல்கிறீர்கள்?" என்று நான் அவர்களிடத்தில் கேட்டேன்.

அதற்கு அவர்கள், "முதலாவது, அதே நாளில் என் துக்கமெல்லாம் நீங்கி, பயமெல்லாம் மாறி, ஒரு சந்தோஷம் என் உள்ளத்தில் வந்தது. அடுத்து, என் மனைவியின் சரீரத்தில் அற்புதமான மாற்றம் உண்டானது. குடும்ப டாக்டரிடத்தில் போய் திரும்பவும் பரிசோதித்துப் பார்த்தபோது, அந்த ஏழு விதமான நோய்களும் நீங்கிப் போனதை டாக்டர் கண்டுபிடித்தார். 'இது உங்களுக்கு எப்படி நடந்தது? இப்பொழுது உங்களுக்கு ஒரு பாதிப்பும் இல்லை! இனி மாத்திரைகளே சாப்பிடத் தேவையில்லை.' என்று சொல்லி விட்டார்.

ஒரே நாளில், ஒரே நேரத்தில் ஏழு விதமான நோய்களும் மறைந்தது அதிசயமல்லவா? இயேசு கிறிஸ்து எங்கள் குடும்பத்திலிருந்த சாபத்தை எல்லாம் மாற்றி விட்டார் என்பதை நாங்கள் அறிந்து கொண்டோம். அவர் செய்த அற்புதத்தைப் பற்றி உங்களிடத்தில் சொல்ல வேண்டும் என்று எண்ணித்தான் புறப்பட்டு வந்தோம்." என்று சொன்னார்கள்.


பாருங்கள், சாபத்தினால்தான் தங்கள் வாழ்க்கையில் இந்தப் பாதிப்புகள் என்பதை, ஆரம்பத்தில் அவர்கள் அறியாமல் இருந்தார்கள். இப்படித்தான் இன்றைக்கு, அனேகர் தங்கள் அறியாமையினால் துக்கத்தில் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுடைய சாபத்தை மாற்றிய இயேசு கிறிஸ்து, இன்றைக்கு உங்களுக்கும் செய்வார். இயேசு கிறிஸ்துவாகிய வெளிச்சம், உங்கள் சாப இருளை நீக்கும். உங்கள் வாழ்க்கையில் சாப இருள் இருக்கிறதா? என்று, நீங்களே உங்களை சோதித்துப் பாருங்கள்!

**'சிலை வணக்கம்' சாபத்தைக் கொண்டு வரும்!** அது, இயேசு கிறிஸ்துவின் சிலையாக இருந்தாலும் சரி, மரியாளின் சிலையாக இருந்தாலும் சரி, எந்த தேவ தூதர்களின் சிலையாக இருந்தாலும் சரி, "சிலையைப் பார்த்து வணங்குவது, சாபத்தைக் கொண்டு வரும்.' என்று கர்த்தருடைய வார்த்தை சொல்கிறது. **(யாத். 20:3-5).**

"நாங்கள் பாரம்பரியமாகச் செய்து வருகிறோம். முன்னோர்கள் எல்லோரும் இப்படித்தானே செய்திருக்கிறார்கள்! அவர்கள் சரியாகத்தானே செய்திருப்பார்கள்!" என்று சொல்கிறோம். ஒன்றை அறிந்து கொள்ளுங்கள், **வேத வசனத்திற்கு மாறான பாரம்பரியமான பழக்கங்கள் எல்லாமே சாபத்தைத்தான் கொண்டு வரும்.**

**"உம்முடைய சீஷர்கள் முன்னோர்களின் பாரம்பரியத்தை ஏன் மீறி நடக்கிறார்கள்?"** (மத்தேயு 15:2) என்று, இயேசு கிறிஸ்துவினிடத்தில் அன்றைய சில மதத் தலைவர்கள் கேட்டபோது,



**"நீங்கள் உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை ஏன் மீறி நடக்கிறீர்கள்?"** (மத்தேயு 15:3) என்று அவர் கேட்டார்.

**முன்னோர்களுடைய பாரம்பரியம் முக்கியமல்ல. தேவனுடைய வார்த்தையாகிய வேத வசனமே முக்கியம்** என்பதை, இயேசு கிறிஸ்து தெளிவுபடுத்தி இருக்கிறார். வேத வசனத்திற்கு மாறான முன்னோர்களுடைய பாரம்பரியங்கள், சாபத்தைத்தான்

கொண்டு வரும்! ஆனால் கர்த்தருடைய வார்த்தையோ, ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும்!

**"மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்..."** (மத்தேயு 15:9) என்று, மிகுந்த வேதனையோடு இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கிறார். வேத வசனத்திற்கு மாறான பாரம்பரியங்களை நீங்கள் பக்தியாய் கடைப்பிடித்து வந்தாலும், அது சாபத்தைத்தான் கொண்டு வரும்.

மனுஷனை ஒரு தெய்வமாக வணங்குவது, சிருஷ்டிகரை வணங்காமல், சிருஷ்டிக்கப்பட்ட பறவைகளையும், மிருகங்களையும், பொருட்களையும் தெய்வமாக வணங்குவது சாபத்தைக் கொண்டு வரும். **(ரோமர் 2:23,24).** மரித்துப் போன மனிதனை தெய்வமாக வணங்கும்போது, அதில் அசுத்த ஆவி வந்து கிரியை செய்யும். அது சாபத்தைத்தான் கொண்டு வரும்.

**நீங்கள், 'தெய்வம்' என்று நம்பி வணங்குவது, உண்மையான தெய்வம் தானா?** என்று சோதித்துப் பாருங்கள். 'நம்பிக்கை' என்று சொல்லி, தவறானதை 'தெய்வம்' என்று நம்பி வணங்கினால், சாபம் வரும்.

இன்றைக்கு, ஏராளமான கிறிஸ்தவர்கள் வேத வசனத்திற்குச் செவி கொடுக்காமல், முன்னோர்களுடைய 'பாரம்பரியம்' என்று சொல்லி, தவறான நம்பிக்கைக்கு இடம் கொடுத்தபடியினால், ஏராளமான கிறிஸ்தவக் குடும்பங்கள் சாபத்திற்குள் கிடந்து வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இன்று, உங்களை சோதித்துப் பாருங்கள். நீங்கள் வேத வசனத்தின்படி நடக்கிறீர்களா?, அல்லது 'பாரம்பரியம்' என்று சொல்லிக் கொண்டு, சாப வழியில் நடக்கிறீர்களா?

இந்த சாப இருள், இன்றைக்கு பலரையும் பாழாக்கிக் கொண்டிருக்கிறது. **சாபத்திற்குப் பரிகாரி, இயேசு கிறிஸ்துதான்!** வேறு எந்த வழியிலும் சாபத்திலிருந்து விடுதலை பெறவே முடியாது. "சாபத்திற்குப் பரிகாரம்" என்று சொல்லி, தவறான அனேகக் காரியங்களைச் செய்து, மேலும் மேலும் சாபத்தைக் கூட்டிக் கொள்கிறவர்கள் இன்றைக்கு ஏராளம்.

சாபத்திற்குப் பரிகாரம் இலவசம்! கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இலவசமாகவே சாபங்களை நீக்கிப் போடுவார். காரணம், அவர் ஒருவர்தான் நமக்காக சிலுவையில் சாபமானார். **(கலா. 3:13).** நம்முடைய சாபங்களை எல்லாம் அவர் தன் மேல் ஏற்றுக் கொண்டு, சிலுவையில் நமக்காக இரத்தம் சிந்தினார். இயேசு கிறிஸ்துவின் இரத்தம்தான் சாபக் கிரியைகளை அழிக்க முடியும்.

ஆகவே, இயேசு கிறிஸ்துவாகிய வெளிச்சம் உங்கள் வாழ்க்கையில் வர இடம் கொடுங்கள். அந்த வெளிச்சம் வந்து விட்டால், இருள் நீங்கிப் போகும்!

**சாப இருள் நீங்கி, உங்களுக்கு ஆசீர்வாதம் உண்டாகும். உங்கள் துக்க நாட்கள் முடிந்து போகும்.**

# பிசாசின் இருள் அழியும்!

'சாத்தான்' இருளின் தூதன்! மனிதர்களுடைய வாழ்க்கையில் அவன் இருளைக் கொண்டு வந்து, அவர்களை வேதனைப்படுத்துகிறான். பில்லி-சூனியங்கள், மந்திரவாதங்கள் யாவும் இருட்டிலேதான் செய்யப்படுகிறது. பெரும்பாலும் ஆபத்துகளும், அழிவுகளும் இருளில்தான் நடக்கிறது.

ஆகவேதான், **"இரவில் உண்டாகும் பயங்கரம்... இருளில் நடமாடும் கொள்ளைநோய்..."** என்று, பரிசுத்த வேதாகமம் சாத்தானின் கிரியைகளை விவரிக்கிறது. **(சங்கீதம் 91:5,6).**

**சாத்தான் ஒரு குடும்பத்தைத் தாக்கும்போது, அந்த வீட்டை இருள் சூழ்ந்து கொள்கிறது.** 'வியாதி', 'வேதனை', 'பயம்' போன்றவைகள், அந்த வீட்டாரைப் பிடித்துக் கொள்கிறது. மரண பயம் அவர்களை வாதிக்கிறது. சாத்தானுடைய கிரியைகளைக் குறித்து இயேசு கிறிஸ்து சொல்லும்போது, **"திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான்."** (யோவான் 10:10) என்று, சாத்தானைத்தான் 'திருடன்' என்று சொல்கிறார்.

அவன் பாவத்தைக் கொண்டு வந்து, சமாதானத்தை திருடி விடுவான்! நோய்களைக் கொண்டு வந்து, ஆரோக்கியத்தை திருடி விடுவான்! பயத்தைக் கொண்டு வந்து, சந்தோஷத்தை திருடி விடுவான்! நஷ்டத்தைக் கொண்டு வந்து, லாபத்தை திருடி விடுவான்! சந்தேகத்தைக் கொண்டு வந்து, விசுவாசத்தை திருடி விடுவான்! திருடனாகிய சாத்தான், உங்கள் வாழ்க்கையில் இருளைக் கொண்டு வந்து, உங்கள் ஆசீர்வாதங்களை திருடி விட்டான்! உங்களை துக்கத்துக்குள்ளாக்கி விட்டான்!

**இன்று, இயேசு கிறிஸ்துவாகிய வெளிச்சம், சாத்தானின் இருளை அழிக்கும்!**

**"பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் (இயேசு கிறிஸ்து) வெளிப்பட்டார்."** 1 யோவான் 3:8.

ஆகவேதான், இயேசு கிறிஸ்து போன இடங்களில் எல்லாம் பிசாசுகள் அலறி ஓட ஆரம்பித்தன. **இயேசு கிறிஸ்து, பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராய் சுற்றித் திரிந்தார். (அப். 10:38).**

இன்று, பிசாசாகிய இருளின் வல்லமையினால் நீங்கள் பாதிக்கப்பட்டு, துக்கத்தில் வாழ்ந்து கொண்டிருக்கலாம்! இருளின் அந்தகாரத்திலிருந்து உங்களை விடுதலையாக்குகிறவர் இயேசு கிறிஸ்து மாத்திரமே! **(கொலோ. 1:13).**

அனேக ஆண்டுகளுக்கு முன்பாக, விழுப்புரத்திலுள்ள ஒரு மைதானத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஒரு சுவிசேஷக் கூட்டத்தில் நான் பிரசங்கித்து, ஜனங்களின் ஆசீர்வாதங்களுக்காக ஜெபித்தேன். அருகிலுள்ள ஒரு சிறிய கிராமத்திலிருந்து வந்திருந்த ஒரு ஏழைத் தாயார், சாட்சி வேளையில் மேடையில் வந்து ஏறி, ஆச்சரியமான ஒரு அனுபவத்தைச் இப்படியாகச் சொன்னார்கள்:

"சுமார் 30 வருடங்களுக்கும் மேலாக, ஒரு அசுத்த ஆவி எனக்குள் இருந்தது. 24 மணி நேரமும் அந்த ஆவி என் சரீரத்துக்குள் இருப்பது எனக்கு நன்றாகவே தெரியும். பல விதங்களில் அந்த ஆவி என்னை வேதனைப்படுத்தி வந்தது. பயம், வியாதி, பெலவீனங்களை உண்டாக்கி, என்னை வேதனைப்படுத்தும். 'அந்தப் பொல்லாத ஆவி என்னை விட்டுப் போக வேண்டும்.' என்று, அனேக இடங்களுக்குச் சென்று, எத்தனையோ பரிகாரங்களை எல்லாம் செய்து பார்த்தும், அது என்னை விட்டுப் போகவில்லை.

'இயேசு கிறிஸ்துவினிடத்தில் வந்தால், விடுதலை கிடைக்கும்!' என்று சொன்னார்கள். அதனால் இந்தக் கூட்டத்திற்கு வந்து, கலந்து கொண்டேன். எல்லோரும் வேண்டுதல் செய்தபோது, நானும் இயேசு கிறிஸ்துவை நோக்கிக் கூப்பிட்டேன். அப்பொழுது, ஒரு பிரகாசமான வெளிச்சமாக, வெள்ளை உடை அணிந்த ஒருவர் என் பக்கத்தில் வந்து, என்னைத் தொட்டார். உடனே அந்தப் பிசாசு என்னை விட்டு விலகிப் போய் விட்டது. இப்போது நான் மிகவும் சந்தோஷமாக இருக்கிறேன்." என்று சொன்னார்கள்.

அப்பொழுது நான் அவர்களைப் பார்த்து, "அந்த வெள்ளை உடை அணிந்து வந்தவர் யார்?" என்று கேட்டேன். அதற்கு அவர்கள், "இயேசு கிறிஸ்துதான் அவர்! நான் முதன்முதலாக அவரிடத்தில் வந்து அவரை நோக்கிக் கூப்பிட்டேன். அவரே வந்து எனக்கு விடுதலை தந்து விட்டார்." என்றார்கள் மிகுந்த மகிழ்ச்சியாக.

பாருங்கள், 30 வருடங்களாக இருந்த அந்தத் தாயாருடைய துக்க நாட்கள் முடிந்து போனது. இயேசு கிறிஸ்துவாகிய வெளிச்சம் அவர்களுக்குள் வந்ததும், பிசாசாகிய இருள் தானாக விலகிப் போனது.

இன்றைக்கு, உங்களை துக்கப்படுத்துகிற சாத்தானின் கிரியைகள் என்ன?

பயமா? வியாதியா? வேதனையா? நஷ்டமா? மன அழுத்தமா? அது, எதுவாக இருந்தால் என்ன? இயேசு கிறிஸ்துவால் அதை மாற்ற முடியும்!

"இருளின் அந்தகாரத்தினின்று நம்மை விடுதலையாக்குகிறவர் இயேசு கிறிஸ்து!" என்று பரிசுத்த வேதாகமம் சொல்கிறது. **(கொலோ. 1:13).**


இன்று, உங்களை வேதனைப்படுத்துகிற அந்தகார இருள் எதுவானாலும், இயேசு கிறிஸ்து உங்களுக்கு விடுதலை தருவார். இத்தனை வருடங்களாக உங்களை தொடர்ந்து வருகிற அந்த இருளின் வல்லமையை அழித்து, உங்கள் துக்கத்திற்கு ஒரு முடிவை உண்டாக்கத்தான், இன்று இயேசு கிறிஸ்து உங்களை சந்தித்துக் கொண்டிருக்கிறார்.

சாத்தான் கொடுக்கிற வேதனையில் மிகவும் கொடூரமான வேதனை, மரண பயத்தின் வேதனை! இன்றைக்கு, ஏராளமான மக்களை இந்த மரண பயம் வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிறது. இந்த மரண பயத்தினால், "இன்று நான் மரித்துப் போய் விடுவேனோ?" என்று எண்ணி, தினந்தோறும் வேதனைப்பட்டுக் கலங்குகிறார்கள்.

இதனால், இரவில் அவர்களால் நிம்மதியாகத் தூங்க முடிவதில்லை. தங்கள் வேலைகளில் கவனம் செலுத்த முடிவதில்லை. இறுதியில், 'மரித்து விட்டால் நல்லது!' என்கிற ஒரு தற்கொலை எண்ணம் தோன்றி, "நான் தற்கொலை செய்து கொள்வேனோ?" என்று எண்ணி, தினம் தினம் பயந்து சாகிறார்கள்!

இப்படிப்பட்டவர்கள் எப்படி சந்தோஷமாக இருக்க முடியும்? மரண பயத்தின் துக்கத்தினால், தினமும் வாட்டி வதைக்கப்படுகிறார்கள்.

ஆகவேதான், இயேசு கிறிஸ்து இந்த மரண பயத்திலிருந்து மனுக் குலத்தை விடுதலையாக்கி மகிழ்விக்க, தாமே மரணத்தின் வழியாகக் கடந்து சென்று, மரணத்தை ஜெயித்து உயிர்த்தெழுந்தார்!



"...மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது (இயேசு கிறிஸ்துவின்) மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார்."
எபிரெயர் 2:14,15.

மரணத்தை ஜெயித்து உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவினால்தான், மரண பயத்திலிருந்து விடுதலை கொடுக்க முடியும். இயேசு கிறிஸ்துவாகிய வெளிச்சம் வரும்போது, மரண இருள் விலகும்.

ஆகவேதான், "கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகில் ஒளியாக வந்தபோது, "...மரண இருளின் திசையிலிருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்தது..." (மத்தேயு 4:15) என்று சொல்லப்பட்டது.

ஒரு சமயம், ஜெபிப்பதற்காக ஒரு சகோதரர் என்னிடத்தில் வந்தார். நான் அவரிடத்தில், "எதற்காக ஜெபிக்க வேண்டும்?" என்று கேட்டபோது, இப்படியாக ஒரு வினோதமான காரியத்தைச் சொன்னார்:

"நான் வீட்டில் இருந்தாலும், தெருவில் நடந்து சென்றாலும், அலுவலகத்தில் இருந்தாலும், யாரோ ஒருவர் என்னைப் பின்தொடர்ந்து வருவதைப் போலவே எனக்குத் தெரியும்! திரும்பிப் பார்த்தால், யாருமே இருக்க மாட்டார்கள்! உடனே என்னுடைய இருதயம் வேகமாகத் துடிக்க ஆரம்பிக்கும்! ஒரு விதமான பயம் என்னை ஆட் கொள்ளும். இரவில் படுக்கைக்குச் சென்றால், "தூங்கும்போதே மரித்துப் போய் விடுவேனோ?" என்கிற ஒரு பயம் எனக்கு உண்டாகும். இரவெல்லாம் தூங்காமல் விழித்துக் கொண்டே இருப்பேன். அதிகாலை நேரத்தில்தான் கொஞ்ச நேரம் தூங்குவேன். இது, ஒருநாள் இரண்டு நாள் அல்ல, தொடர்ச்சியாக, பல மாதங்கள் எனக்கு இந்த வேதனை இருக்கிறது. இதை விட, 'நான் மரித்து விட்டால் நல்லது!' என்று தோன்றுகிறது." என்றார் மிகுந்த துக்கத்தோடு.

நான் அவரிடத்தில், "மரணத்திற்கு அதிகாரியாகிய பிசாசை ஜெயித்த இயேசு கிறிஸ்து இருக்கும்போது, ஏன் பயப்பட வேண்டும்? அவர் உங்களுக்கு விடுதலை தருவார்." என்று அவருக்கு ஆறுதல் சொல்லி, அவருடைய விடுதலைக்காக ஜெபித்து அனுப்பினேன்.

அன்றோடு அந்தப் பிசாசின் கிரியை அழிந்து போனது. மரண பயத்திலிருந்து அவருக்கு ஒரு பூரண விடுதலை உண்டாயிற்று. அவருடைய துக்க நாட்கள் முடிந்து போனது. இன்று, உங்களுக்கும் செய்வார்! இயேசு கிறிஸ்து உங்களுக்கு அற்புதம் செய்வார்.

**உங்களுக்கு விரோதமாகப் போராடிக் கொண்டிருக்கிற இருளின் வல்லமைகள் அழிக்கப்படும்.**

# உங்கள் துக்க நாட்கள் முடிந்து போகும்!

இதுவரை உங்களை துக்கப்படுத்திக் கொண்டு வருகிற காரியங்கள் என்னென்ன?

- **பாவத்தினால் உண்டான துக்கம்!**
- **சாபத்தினால் உண்டான துக்கம்!**
- **நோயினால் உண்டான துக்கம்!**
- **பேயினால் உண்டான துக்கம்!**
- **குறைவினால் உண்டான துக்கம்!**
- **கடன் பிரச்சனையினால் உண்டான துக்கம்!**
- **இழப்பினால் உண்டான துக்கம்!**
- **தடைகளினால் உண்டான துக்கம்!**
- **நிந்தைகளினால் உண்டான துக்கம்!**

என்ன துக்கம் உங்களை வாட்டி வதைக்கிறது? என்ன பிரச்சனை உங்களை இருளாக சூழ்ந்து வேதனைப்படுத்துகிறது?

**எதுவானாலும் கலங்காதீர்கள்!**

**"உன் துக்க நாட்கள் முடிந்து போகும்!"** என்று, கர்த்தர் உங்களுக்கு வாக்குக் கொடுத்திருக்கிறார். கர்த்தருடைய வெளிச்சம் உங்கள் மேல் உதிக்கும்போது, துக்கத்தைக் கொண்டு வருகிற இருள் விலகிப் போகும்.

**இன்றைக்கே நீங்கள் இந்த அற்புதத்தைக் காண்பீர்கள்! விசுவாசியுங்கள்!**

"இந்த வாக்குத்தத்தம் எனக்குத்தான்!" என்று நீங்கள் **விசுவாசியுங்கள்.**

"இந்த வாக்குத்தத்தம் என் குடும்பத்திற்குத்தான்!" என்று நீங்கள் **விசுவாசியுங்கள்.**

"இன்றைக்கு என் துக்கத்திற்கு முடிவு வரும்!" என்று நீங்கள் **விசுவாசியுங்கள்.**

வெளிச்சத்தின் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, உங்கள் உள்ளத்திலும், உங்கள் இல்லத்திலும் ஒளி வீச, உங்களுக்காக நான் ஜெபிக்கப் போகிறேன்.

இயேசு கிறிஸ்துவை, நீங்கள் உங்களுக்குச் சொந்தமாக்கிக் கொண்டிருந்தால், "என் வாழ்க்கையின் ஒளியாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுக்கு

ஸ்தோத்திரம்!" என்று சொல்லி, அவரை துதியுங்கள். நீங்கள் துதிக்கத் துதிக்க, தேவப் பிரசன்னம் உங்களை நிரப்பும். இருளின் ஆதிக்கங்கள் தானாக அழிந்து போகும்.

இதுவரை நீங்கள், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை உங்களுக்கு சொந்தமாக்கிக் கொள்ளாமல் இருந்தால், இன்றைக்கே அவரை உங்கள் வாழ்க்கையில் ஏற்றுக் கொள்ளுங்கள். நீதியின் சூரியனாம் இயேசு கிறிஸ்து உங்கள் வாழ்க்கையில் உதிக்கும்போது, எல்லா இருளின் வல்லமைகளும் தானாக விலகிப் போய் விடும். **உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்!**

விசுவாசத்தோடு இந்த ஜெபத்தைச் செய்யுங்கள். ஒரு அற்புத மாற்றத்தை உணரும் வரை திரும்பத் திரும்ப ஜெபியுங்கள். இன்றைக்கே உங்கள் வாழ்க்கையில் வெளிச்சம் உதிக்கும்! இருள் விலகும்! அற்புதம் நடக்கும்!

வாக்குத்தத்தங்களின் தேவனே, உமக்கு ஸ்தோத்திரம்!



இந்தப் புதிய வருடத்தைக் காணச் செய்ததற்காக, உமக்கு ஸ்தோத்திரம்!

இந்த வருடத்திற்கு நீர் எனக்குத் தந்த இந்த வாக்குத்தத்தத்திற்காக, உமக்கு ஸ்தோத்திரம்!

"இந்த வாக்குத்தத்தம் எனக்குரியது!" என்று நான் விசுவாசிக்கிறேன்!

"நீரே என் வாழ்க்கைக்கு வெளிச்சம்! என் துக்க நாட்கள் முடிந்து போகும்!" என்பதை நான் விசுவாசிக்கிறேன்! இயேசுவே, என் பாவ, சாப இருள் நீங்கும்படி, உம்முடைய வெளிச்சம் என் மேல் உதிப்பதாக!

என் மரண பயத்தைப் போக்குவதற்காக, நீர் சிலுவையில் மரணத்தை ஜெயித்தீரே, உமக்கு ஸ்தோத்திரம்! உயிர்த்தெழுந்த இயேசுவே, உம்முடைய வெளிச்சம் என்னை நிரப்புவதாக! சாத்தானின் இருள் அழிவதாக!

எனக்கு விரோதமாக செயல்படுகிற சகல சாத்தானின் கிரியைகளும், இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் முற்றிலும் அழிவதாக!

என்னை துக்கப்படுத்துகிற வியாதிகள்...வேதனைகள்...கடன் பாரங்கள்...பிரச்சனைகள் யாவும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் விலகுவதாக!

நீர் எனக்குச் சொன்ன வாக்கின்படியே, என் துக்க நாட்கள் முடிந்து போவதாக! அற்புதங்கள் நடப்பதாக! என் குடும்பத்தில் இருக்கிற யாவர் மீதும், உம்முடைய வெளிச்சம் பிரகாசிப்பதாக! இருளின் ஆதிக்கங்கள், என் குடும்பத்தை விட்டே விலகிப் போவதாக!

உம்முடைய வாக்கின்படியே, என்னுடைய துக்க நாட்கள் முடிவதாக! ஆசீர்வாதத்தின் நாட்கள் வருவதாக! இந்த ஆண்டு முழுவதும், நீர் சொன்னபடியே உம்முடைய வெளிச்சம் என்னில் பிரகாசிப்பதாக! அனுதினமும் அற்புதங்கள் நடப்பதாக!

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வேண்டிக் கொள்கிறேன் பிதாவே, ஆமென்! ஆமென்!


நமது சகோதரர் மோகன். சி. லாசரஸ் அவர்கள் அளித்த,

2017ம் வருடத்திற்கான புத்தாண்டு

**வாக்குத்தத்தச் செய்தி!**

எமது தலைமை மற்றும் எல்லாக் கிளை அலுவலகங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்!




DVDயில்!

நேரில் பெற **100/-** ரூபா

தபாலில் பெற **150/-** ரூபா

Online Purchase: www.jesusredeemsonline.com www.jesusredeems.com

'இயேசு விடுவிக்கிறார்' வழங்கும்...

**2017ம் ஆண்டிற்கான**

வாக்குத்தத்த வசனங்கள் அடங்கிய


**BIBLE LAND காலண்டர்!** (தமிழ்)



- எமது தலைமை மற்றும் எல்லா கிளை அலுவலகங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்!
- தேவைப்படுகிறவர்கள் உங்களது தொலைபேசி எண்ணுடன் கூடிய தெளிவான முகவரியுடன் எங்களோடு தொடர்பு கொள்ளலாம்.

| காலண்டர் ஒன்றுக்கு | |
| --- | --- |
| நேரில் பெற | தபாலில் பெற |
| 100/- ரூபா | 150/- ரூபா |

Online Purchase: www.jesusredeemsonline.com www.jesusredeems.com




## தேவனுடைய திட்டம்...

# தேவனுடைய கூடாரம்!

"சுமார் 50,000 பேர் அமர்ந்து ஜெபிக்கும்படியான தேவனுடைய கூடாரத்தைக் கட்ட வேண்டும்." என்பது, என் விருப்பமல்ல. கர்த்தர் இதைச் சொன்ன போதுகூட, நான் செய்ய துணியவில்லை. "மாதத்தில் ஒருநாள் கூடி ஜெபிக்க, இவ்வளவு செலவு செய்து இப்படிப்பட்ட ஒரு பெரிய கட்டிடம் தேவையா?" என்று நான் கர்த்தரிடத்திலேயே கேட்டேன். இதற்காக எந்த ஒரு முயற்சியும் செய்யாமல், அமைதியாகவே இருந்தேன்.

அப்பொழுது, 7½ ஏக்கர் நிலத்தை கர்த்தர் இலவசமாக நம் ஊழியத்திற்குக் கொடுத்து, "இந்தத் திட்டத்தை நிறைவேற்று." என்று கட்டளையிட்டார்.

மேலும், "இது, மாதத்தில் ஒருநாள் திறப்பின் வாசல் ஜெபம் நடத்துவதற்காக மட்டுமல்ல, இது ஒரு எழுப்புதல் ஜெப மையமாக இருக்கும். எழுப்புதல் காலத்தில் இங்கு தினமும் ஊழியங்கள் நடைபெறும்!" என்று கர்த்தர் திருவுளம் பற்றினார்.

என்றாலும், "இவ்வளவு பெரிய தேவைக்கு நான் என்ன செய்வேன்?" என்று கர்த்தரிடத்தில் கேட்டபோது, "தேவைக்கு நீ எங்கும் செல்ல வேண்டாம். யாரிடத்திலும் கேட்கவும் வேண்டாம். பத்திரிக்கையில் மட்டும் இந்த தேவ திட்டத்தைப் பற்றித் தெரியப்படுத்து. என்னால் ஏவப்படுகிற என் ஜனங்களைக் கொண்டு, நான் இதைக் கட்டித் தருவேன்." என்று வாக்குக் கொடுத்தார்.

இந்தக் காரியத்தில், தான் வாக்குக் கொடுத்தபடியே கர்த்தர் செய்து வருகிறார். திறப்பின் வாசல் ஜெபத்தில் கூட, தேவனுடைய கூடாரத்திற்காக காணிக்கை கேட்டதுமில்லை, எடுத்ததுமில்லை! நம் டி.வி. நிகழ்ச்சிகளில் கூட, தேவனுடைய கூடாரத்திற்காக காணிக்கை கேட்டதில்லை. நான் ஊழியத்திற்குச் செல்கிற எந்த இடத்திலும், வெளி நாடுகளிலும் கூட, தேவனுடைய கூடாரத்திற்கென்று காணிக்கை கேட்டதில்லை. தான் வாக்குக் கொடுத்தபடியே, தன்னுடைய பிள்ளைகளைக் கொண்டு, கர்த்தர் இதைக் கட்டி வருகிறார்.

**"இந்த தேவனுடைய கூடாரத்திற்குக் கொடுக்கிற மக்களை நான் ஆசீர்வதிப்பேன்." (லூக்கா 6:38)** என்று, கர்த்தர் வாக்குக் கொடுத்தபடி, இதற்காகக் கொடுக்கிற மக்களை கர்த்தர் பல விதங்களில் ஆசீர்வதித்து வருகிறார். ஆசீர்வதிக்கப்பட்ட மக்களின் சாட்சிக் கடிதங்கள் தினமும் எங்களுக்கு வந்து கொண்டிருக்கிறது.

கர்த்தருடைய கிருபையினால், 75 சதவிகித வேலைகள் முடிந்திருக்கிறது. இன்னும் 25 சதவிகித வேலைகள் முடிக்கப்பட வேண்டும்.

இப்பொழுதே தேவனுடைய கூடாரத்தில், வாரந்தோறும் **'அற்புத விடுதலைப் பிரார்த்தனை!'**, மாதந்தோறும் **'திறப்பின் வாசல் ஜெபம்!'**, **'முழு இரவு ஜெபம்!'**, **'மூத்த குடி மக்கள் கூட்டம்!'**, **'விதவைகள்'** மற்றும் **'மாற்றுத்திறனாளிகள் கூட்டம்!'**, **'வாலிபர் ஜெபம்!'**, **'சிறுவர் ஜெபம்!'**, தினந்தோறும் இந்தியாவிற்காக ஜெபிக்கிற, **'ஜாமக்காரன் ஜெபம்!'**, **'அறுவடை வேதாகமக் கல்லூரி'** போன்ற ஊழியங்கள் நடைபெற்று வருகின்றன.

இன்னும் செய்து முடிக்கப்பட இருக்கிற, 25 சதவிகித வேலைகளை கர்த்தர் சீக்கிரமாக முடித்துத் தர **ஜெபியுங்கள்**. இந்த தேவனுடைய எழுப்புதல் திட்டத்தில், உங்கள் பங்கும் இருக்கும்படியாக, கர்த்தர் உங்களை ஏவுகிறபடி நீங்கள் அனுப்பலாம்.

**இந்த தேவனுடைய கூடாரக் கட்டுமானப் பணிக்காகக் காணிக்கை அனுப்ப நீங்கள் கர்த்தரால் ஏவப்பட்டால், இங்கே கொடுக்கப்பட்டுள்ள வங்கிக் கணக்கில் உங்கள் காணிக்கைகளைச் செலுத்தி, தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.**

- உங்கள் சகோதரன்.

### காணிக்கை அனுப்ப...

| | |
|---|---|
| A/c Name: | Jesus Redeems Ministries - Sri Lanka, |
| A/c No: | 7010 1000 7680 |
| Bank Name: | Hatton National Bank PLC. |
| Branch: | Nawam Mawatha - Colombo -02. |
| Swift Code: | HBLILKLXXXX. |

**Contact: 57/36A, Thimbirigasyaya Road, Hendala, P.O. 108, Wattala, SRILANKA.**

***(Ph: 011 293 0152, 071 437 1111)***

JESUS REDEEMS MINISTRIES

# 2016ம் வருடத்தில், 'இயேசு விடுவிக்கிறார்' ஊழியங்களில் வழி நடத்திய வல்லவர் இயேசு!

கடந்த 2016ம் வருடத்தில், **"நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருப்பேன்."** (யோசுவா 1:5) என்று வாக்குப் பண்ணிய கர்த்தராகிய தேவன், அந்த வருடம் முழுவதும் நடைபெற்ற எல்லா ஊழியங்களிலும் கூடவே இருந்து வழி நடத்தி, கிரகிக்க முடியாத எண்ணற்ற காரியங்களைச் செய்து, தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்தினார். கர்த்தர் இந்த ஊழியத்தில் செய்த அந்த மகத்துவமான காரியங்களை எல்லாம், இந்த ஊழியத்தை நேசித்து, ஜெபித்து, கொடுத்துத் தாங்குகிற தேவ பிள்ளைகளாகிய உங்களோடு கூட பகிர்ந்து கொள்வதில், நான் மிகுந்த சந்தோஷப்படுகிறேன். வாசித்து, **கர்த்தரைத் துதியுங்கள்!**

## விடுதலைப் பெருவிழா!

திருநெல்வேலி மாவட்டம்–**பேரின்பபுரம், பருவக்குடி, கங்கை கொண்டான்** மற்றும் **பேர்னாம்பட்** (வேலூர்) ஆகிய கிராமங்களிலும், **செக்கந்திராபாத்** (ஆந்திரா) மற்றும் **உடுப்பி** (கர்நாடகா) ஆகிய பட்டணங்களிலும் நடத்தப்பட்ட **விடுதலைப் பெருவிழாக்கள்** மூலமாக, ஆயிரக்கணக்கான மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கவும், தங்கள் ஆவி, ஆத்துமா, சரீரத்தில் அவர்கள் விடுதலை மற்றும் அற்புதத்தைப் பெற்றுக் கொள்ளவும் கர்த்தர் கிருபை பாராட்டினார்.



விடுதலைப் பெருவிழா - கங்கை கொண்டான்

## 12 மணி நேர மற்றும் 9 மணி நேர ஜெபங்கள்!

இந்தியாவின் எழுப்புதலில் முக்கியப் பங்கு வகிக்கிற தென் மாநிலங்களில் உள்ள **திருவனந்தபுரம், ஐதராபாத், விஜயவாடா, பெங்களூரு** மற்றும் **ராஞ்சி** (ஜார்கண்ட்) ஆகிய பட்டணங்களில், **12 மணி நேர திறப்பின் வாசல் உபவாச ஜெபம்** நடைபெற்றது. இது தவிர, யூத மற்றும் பாலஸ்தீன மக்களின் எழுப்புதலுக்காக, **ஜெருசலேமில் 12 மணி நேர உபவாச ஜெபத்தையும், பெத்லகேமில் 9 மணி நேர உபவாச ஜெபத்தையும்** நடத்தி முடிக்கக் கர்த்தர் கிருபை செய்தார்.

## மேய்ப்பர்கள் எழுப்புதல் ஜெப கருத்தரங்கு!

**சென்னை, மும்பை, ராஞ்சி** (ஜார்கண்ட்) மற்றும் **குண்டூர்** (ஆந்திரா) ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட **மேய்ப்பர்கள் எழுப்புதல் ஜெப கருத்தரங்குகளில்**, சுமார் **4,500**க்கும் அதிகமான திருச்சபை மேய்ப்பர்கள் கலந்து கொண்டு, கர்த்தருடைய எழுப்புதல் தரிசனத்தைப் பெற்றுக் கொண்டார்கள்.

## இலங்கை தேச ஊழியங்கள்!

இலங்கை–**கிளிநொச்சி**யில் **வாலிபர்களுக்கென்று** நடத்தப்பட்ட **வல்லமை முகாமில்**, சுமார் **600 வாலிபர்கள்** பங்கு பெற்று, புதிய அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டார்கள். **வவுனியாவில்** நடைபெற்ற **விடுதலைப் பெருவிழாவில்**, சுமார் **10,000** பேர்களும், **'காலி'** என்கிற இடத்தில் நடைபெற்ற **3 நாட்கள் உபவாச ஜெபத்தில்**, சுமார் **2,500** பேர்களும், **கொழும்பில்** நடைபெற்ற **வியாபாரிகளுக்கான கூட்டத்தில்**, சுமார் **400** பேர்களும், **அற்புதத்தின் இரவுக் கூட்டத்தில்**, சுமார் **7,000**க்கும் அதிகமான மக்களும் கலந்து கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டனர். கொழும்பு பட்டணத்தில், ஒவ்வொரு மாதமும் தவறாமல் திறப்பின் வாசல் ஜெபங்களை நடத்த கர்த்தர் கிருபை செய்தார்.

## பெண்கள் புது வாழ்வு முகாம்!

ஈரோடு மற்றும் **தாம்பரம்** ஆகிய இடங்களில், பெண்களுக்கான **புது வாழ்வு முகாம்** நடைபெற்றது. சகோதரி **ஜாய்ஸ் லாசரஸ்** அவர்களை, பெண்கள் மத்தியில் கர்த்தர் வல்லமையாகப் பயன்படுத்தினார். இந்த முகாம் மூலமாக ஆயிரக்கணக்கான சகோதரிமார்களின் கண்ணீர் துடைக்கப்பட்டு, ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.



பெண்கள் புது வாழ்வு முகாம் - தாம்பரம்

## மிஷனெரி ஊழியம்!

புதிதாக **25 மிஷனெரிகளைப்** பொறுப்பெடுத்து, மொத்தம் 54 ஸ்தாபனங்கள் மூலமாக, **300 மிஷனெரிகளை** ஒவ்வொரு மாதமும் பொருளுதவியினால் தாங்க கர்த்தர் கிருபை செய்தார்.

**16 புதிய ஆலயங்களை** கட்டிக் கொடுக்கவும், **புதிதாக 10 ஆதிவாசிக் குழந்தைகளைப்** பொறுப்பெடுத்து, மொத்தம் **71 குழந்தைகளைத்** தாங்கவும், அனேகக் குழந்தைகளின் **படிப்பிற்கான செலவைப் பொறுப்பெடுக்கவும்** கர்த்தர் கிருபை செய்தார்.

மேலும், **'ஷாலோம்'** மிஷனெரி ஊழியர்களுக்கு **குடும்ப அபிஷேக முகாம்** மற்றும் **மூப்பர்கள், வாலிபர்களுக்கான சிறப்புக் கூட்டங்களை** நடத்தவும், நமது வட இந்திய மிஷனெரிகளுக்கு, **Tempo Traveller** வாகனம் வாங்கிக் கொடுத்து, அவர்களை உற்சாகப்படுத்தவும், இந்த ஊழியத்தின் மூலமாக, சுமார் **7,05,000** பேருக்கு சுவிசேஷத்தை அறிவிக்கவும், சுமார் **45,750** பேர் **திருமுழுக்குப்** பெற்று, சபைகளில் சேர்க்கப்படவும் கர்த்தர் கிருபை செய்தார்.

## கெத்செமனே ஜெப மையங்கள்!

**ஈரோடு, விழுப்புரம், திசையன்விளை, காரைக்குடி, திருவாரூர், சுரண்டை, திருத்தணி** ஆகிய இடங்களிலும், வெளி நாட்டில் **கனடா, திருகோணமலை (இலங்கை)** ஆகிய இடங்களிலுமாக, மொத்தம் 9 இடங்களில் **கெத்செமனே ஜெப மையங்களை** நிறுவி, தேசத்திற்காக ஜெபிக்க அவைகளை அர்ப்பணிக்க கர்த்தர் உதவி செய்தார். இதுவரை, உலகெங்கிலும் **மொத்தம் 64 கெத்செமனே ஜெப மையங்கள்** செயல்பட்டு வருகிறது.

இந்த ஜெப மையங்களில் சுமார் **1,32,550** பேர் நேரடியாகவும், சுமார் **53,630** பேர் தொலைபேசி மூலமாகவும் தொடர்பு கொண்டு பயனடைந்தார்கள். மேலும், சுமார் **92,785** பேர் இங்கு வந்து தேசத்திற்காக ஜெபித்துச் சென்றுள்ளார்கள். மொத்தம் சுமார் **2,55,500:00** மணி நேரங்கள் ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டுள்ளது. சுமார் **585** பேர் புதிதாக இரட்சிக்கப்பட்டுள்ளார்கள்.

## தேவனுடைய கூடாரம்!

சுமார் **50** பேர் தினந்தோறும் நடைபெறுகிற **'ஜாமக்காரன்'** ஜெபத்திலும், சுமார் **20** பேர் மூத்த குடி மக்களாக இணைந்து, வாரந்தோறும் நடைபெறுகிற **'சிமியோன்'** ஜெபத்திலும், கணவனை இழந்த சில சகோதரிகளாக இணைந்து, **'அன்னாள்'** ஜெபத்திலும், சுமார் **1,000**க்கும் அதிகமானோர் மாதந்தோறும் நடைபெறுகிற **முழு இரவு ஜெபத்திலும்**, சுமார் **200** பேர்கள் **'வாலிபர் கூடுகை'**யிலும் கலந்து கொண்டு ஜெபித்தார்கள்.

சுமார் **40,000**க்கும் அதிகமான ஜனங்கள் மாதந்தோறும் நடைபெறுகிற **திறப்பின் வாசல் ஜெபத்திலும்**, சுமார் **5,000**க்கும் அதிகமானோர் வாரந்தோறும் நடைபெறுகிற **'அற்புத விடுதலைப் பிரார்த்தனை'**யிலும் கலந்து கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

சுமார் **10,000**க்கும் அதிகமானோர், (3 நாட்கள்) **திறப்பின் வாசல் உபவாச ஜெப முகாமில்** கலந்து கொண்டு, தேசத்திற்காக ஜெபித்தார்கள். சுமார் **12,000**க்கும் அதிகமானோர் **விடுதலை முகாமில்** கலந்து கொண்டு, தங்களது ஆவி, ஆத்துமா, சரீரத்தில் விடுதலையைப் பெற்றுக் கொண்டார்கள்.

மேலும் ஒவ்வொரு மாதமும் நடைபெற்ற, **'மூத்த குடி மக்கள்'** மற்றும் **'விதவைகள்' சிறப்புக் கூடுகைகளிலுமாக**, சுமார் **2,000** பேர்களும், **'மாற்றுத் திறனாளிகள்'** கூடுகையில், சுமார் **500** பேர்களும், **'சுவிசேஷகர்கள்'** கூடுகையில், சுமார் **50** பேர்களும் கலந்து கொண்டு, ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

வியாபாரிகளுக்கான **ஆசீர்வாத உபவாச ஜெபத்தில்**, சுமார் **30,000**க்கும் மேற்பட்ட தொழில் மற்றும் வியாபாரம் செய்கிறவர்கள் கலந்து கொண்டார்கள்.

வாலிபர்களுக்கான **'சேனை'** முகாமில், சுமார் **1,200** வாலிபர்கள் கலந்து கொண்டு, தேவ சேனையாக உருவாக்கப்பட்டார்கள். மட்டுமல்ல, நூற்றுக்கணக்கான ஜனங்கள் தினந்தோறும் தேவனுடைய கூடாரத்திற்கு நேரடியாக வந்து ஜெப உதவியையும், தேவ ஆலோசனைகளையும் பெற்றுச் சென்றார்கள்.

கடந்த 2015ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட, **'அறுவடை வேதாகமக் கல்லூரி'** மிக சிறப்பாக நடைபெற்று வருகிறது. தேவனுடைய கூடாரத்தின் கட்டுமானப் பணிகளில், தேவ கிருபையும், பாதுகாப்பும் இருந்தது.

## ஜெப மலை ஊழியங்கள்!

இங்கு நடைபெற்ற **'ஜாமக்காரன்'** ஜெபத்தில், சுமார் **7,914** பேர்கள் கலந்து கொண்டார்கள். நேரில் வந்து ஜெபித்தவர்கள், சுமார் **17,325** பேர்கள். தொலைபேசி மூலமாக, சுமார் **1,557** பேர்கள் ஜெபிக்கக் கேட்டுக் கொண்டார்கள். சுமார் **10,076** பேர்கள் நேரில் வந்து ஜெப உதவியையும், தேவ ஆலோசனைகளையும் பெற்றுச் சென்றார்கள்.

**ஜெப நடைத் தோட்டம்** பிரதிஷ்டை செய்யப்பட்ட நாள்முதல், சுமார் **22,910** பேர்கள் நேரடியாக வந்து, **24705:08** மணி நேரம் ஜெபித்திருக்கிறார்கள். கடந்த 2014 ஆகஸ்ட் 28ம் தேதி பிரதிஷ்டை செய்யப்பட்ட **மன்றாட்டு ஜெபக் கோபுரத்திற்கு**, சுமார் **7,056** பேர்கள் நேரடியாக வந்து, **10,481:84** மணி நேரம் ஜெபித்திருக்கிறார்கள்.

**அற்புத சுகம் ஜெப கோபுரத்திற்கு**, சுமார் **7,646** பேர் நேரடியாக வந்து ஜெபித்து, வியாதியிலிருந்து சுகத்தைப் பெற்றுச் சென்றார்கள். ஒரு கோடி ஆத்துமாக்களுக்காக **63,492:29** மணி நேரம் ஜெபம் ஏறெடுக்கப்பட்டுள்ளது.

வியாழக்கிழமை உபவாச ஜெபத்தில், சுமார் **4,144** பேர்களும், திறப்பின் வாசல் ஜெபத்தில், சுமார் **42,900**க்கும் அதிகமான ஜனங்களும், சுமார் **5,261** பேர்கள் முழு இரவு ஜெபத்திலும் கலந்து கொண்டு ஜெபித்தார்கள்.

மேலும், தன்னார்வ ஊழியர் கூடுகையில் **372** பேர்கள் கலந்து கொண்டார்கள். **687** பேர்கள், **மகளிர் சுய உதவிக் குழு கூடுகையில்** கலந்து கொண்டு ஜெபித்தார்கள். சுமார் **1,366** பேர் ஜெப மலையில் தங்கியிருந்து ஜெபித்தார்கள்.

**'சினெர்ஜியா'** வாலிபர் கூடுகையில், **657** வாலிபர்கள் கலந்து கொண்டு ஜெபித்தனர். சிறு பிள்ளைகளுக்கான **'JR' Kid's Fellowship கூடுகையில்**, சுமார் **1,236** சிறு பிள்ளைகள் கலந்து கொண்டு ஜெபித்தனர்.

நடைபெற்ற கிராம ஊழியத்தின் மூலமாக, சுமார் **3,040** பேர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. அதன் மூலமாக, சுமார் **750** பேர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார்கள்.

## தொலைக்காட்சி ஊழியம்!

நமது தொலைக்காட்சி ஊழிய நிகழ்ச்சிகள், உலகமெங்கும் **13 சேனல்களில்**, **தமிழ், இந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு** ஆகிய **5 மொழிகளில்** ஒளிபரப்பப்பட்டது. சுமார் **1,00,000**க்கும் அதிகமானோர் **24 X 7 webtv (www.jesusredeems.tv)** மூலமாகவும், சுமார் **4,00,000**க்கும் அதிகமானோர் **Youtube** மூலமாகவும், நமது நிகழ்சிகளைப் பார்த்து ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

மட்டுமல்ல, **'குடும்ப ஆசீர்வாத நேரம்!'**, **'உங்கள் அற்புதத்தின் நேரம்!'**, **'உங்கள் ஆசீர்வாத நேரம்!'**, **'ஜாலி டைம்!'**, **'வாலிபர் உலகம்!'**, **'ஜெயம் பெற்றவர்கள்!'**, **'Health Time!'** மற்றும் **'அறிந்து கொள்ளுங்கள்!'** என, பல புதிய **நிகழ்ச்சி**களை தயாரித்து, **வாரந்தோறும் 56 நிகழ்ச்சி**களை ஒளிபரப்பவும் கர்த்தர் கிருபை செய்தார்.

இந்த ஊழியத்தின் மூலமாக, தினந்தோறும் சுமார் **10,00,000**க்கும் அதிகமான மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. **'ஜே!'** என்கிற **சுவிசேஷ சின்னத்திரை சினிமா** (Tele Film) ஒன்றும் தயாரித்து ஒளிப்பரப்பப்பட்டது. இந்த ஊழியத்தின் சகல தேவைகளையும் கர்த்தர் மிக அற்புதமாக சந்தித்துக் கொடுத்தார்.

## சிறுவர் ஊழியம்!

தமிழகமெங்கும் நடத்தப்பட்ட **861 சிறுவர் நிகழ்ச்சி**களின் மூலமாக, சுமார் **1,96,99**க்கும் அதிகமான சிறு பிள்ளைகளுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. **1,174** பேருக்கு **சிறுவர் ஊழியப்**



சிறுவர் விழா – நாலுமாவடி

பயிற்சி கொடுக்கப்பட்டது. **நாகர்கோயில், மானூர், பாளையங்கோட்டை, ஜெப மலை, தூத்துக்குடி, திருப்பூர், கோயம்புத்தூர், சென்னை, தாம்பரம், ஆதம்பாக்கம்** மற்றும் **நாலுமாவடி** ஆகிய 11 இடங்களில் சிறுவர்களுக்கான **மாதாந்திரக் கூடுகை** ('JR' Kid's Fellowship Meeting) நடத்தப்பட்டது.

**சேலம்** மற்றும் **தர்மபுரி** மண்டலங்களுக்கு, **சிறுவர் ஊழியர் குழுவை** பிரதிஷ்டை செய்ய கர்த்தர் கிருபை செய்தார். **திருநெல்வேலி, ஜெப மலை, நாலுமாவடி, மதுரை, திருப்பூர்** ஆகிய இடங்களில் **சிறப்பு முகாம்கள்** நடத்தப்பட்டது. மேலும், அறிவிக்கப்படாத **148 கிராமங்களில் சிறுவர் ஊழியங்கள்** நடைபெற்றது.

இந்த 2017ம் வருடத்தில், **திருச்சி, சென்னை** ஆகிய மண்டலங்களுக்கு புதியதாக சிறுவர் ஊழியக் குழுவினரை உருவாக்கி, ஊழியங்களைச் செய்ய திட்டமிட்டுள்ளோம். முழு நேரமாக சிறுவர் ஊழியம் செய்ய தேவ அழைப்பைப் பெற்ற, வாஞ்சையுள்ளவர்கள் இந்த ஊழியத்தோடு இணைந்து ஊழியம் செய்ய அழைக்கப்படுகிறீர்கள்.

## இளம் வாலிபர் ஊழியம்!

பெங்களூரு, சேலம், நாலுமாவடி, **கோவை, காரைக்குடி, கன்னியாகுமரி, மதுரை, ஜெபத் தோட்டம்** (காளையார்கோவில்),

கொடைக்கானல், வேலூர், புதுக்கோட்டை, காட்டாத்துறை, செங்கல்பட்டு மற்றும் ஈரோடு ஆகிய 14 இடங்களில் **இளம் வாலிபர் முகாம்** நடத்தி, சுமார் **70,000**க்கும் அதிகமான இளம் வாலிபர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் அன்பை எடுத்துச் சொல்லவும், அவர்கள் கிறிஸ்துவுக்குள் நிலைத்து நிற்க, ஆலோசனைகளைக் கொடுக்கவும் கர்த்தர் உதவி செய்தார்.

மேலும், **மதுரை**–Lady Dock College மற்றும் Nehru Educational Society, **இராமநாதபுரம்**–தியாகி தர்மராஜா கலைக் கல்லூரி மற்றும் **கன்னிராஜபுரம்**–B.Ed., College, **செங்கல்பட்டு**–Blessings Mat. School ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட **ஆலய ஆராதனைகள்** மற்றும் **Mini Camp** மூலமாக, தங்களுடைய இளம் வாலிபப் பிள்ளைகளை கிறிஸ்துவுக்குள் வளர்க்க வேண்டிய வழி முறைகளைப் பற்றி, பெற்றோர்களுக்கு எடுத்துச் சொல்லவும் கர்த்தர் கிருபை செய்தார்.

## வாலிபர் ஊழியம்!

**'10 லட்சம் ஆத்தும ஆதாயம்!'** என்கிற புதிய தரிசனத்தோடு, வாலிபர் ஊழியத்தின் மூலமாக, 4 மாநிலங்களிலும், தமிழ்நாட்டின் 5 மாவட்டங்களிலும், 15 தாலுகாக்களிலுமாக, **'வாலிபர் கொண்டாட்டம்!'** மற்றும் **'ஹலோ!' கூடுகைகளை** நடத்த கர்த்தர் கிருபை செய்தார். இதன் மூலமாக, சுமார் **24,246**க்கும் அதிகமான வாலிபர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, சுமார் **10,544** வாலிபர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார்கள்.

தேர்வு எழுதும் மாணவர்களுக்கான **'Achievers-2016'** என்கிற **சிறப்புக் கூடுகை**, தமிழ்நாட்டில் **11 இடங்களிலும், மும்பையிலும்** நடைபெற்றதில், சுமார் **14,672** மாணவர்கள் பங்கு பெற்று, இதன் மூலமாக **9,351** மாணவர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

அனேக பள்ளி மற்றும் கல்லூரிகள் மூலமாக, சுமார் **16,555** மாணவர்களுக்கு சுவிசேஷம் அறிவித்ததின் மூலமாக, சுமார் **8,478** மாணவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள். ஒவ்வொரு மாதமும் 27 இடங்களில் நடைபெறுகிற **'சினெர்ஜியா!'** என்கிற **மாதாந்திர கூடுகையின்** மூலமாக, சுமார் **1,450** வாலிபர்களும், பின்தொடர் ஊழியத்தின் மூலமாக, சுமார் **470** வாலிபர்களும் **'சீஷர்'**களாக மாற்றப்பட்டார்கள்.

ஜெபிக்கிற **வாலிபர் சேனையை** எழுப்ப, 8 இடங்களில் **'மவுண்ட் சீனாய்!'** (ஒருநாள் வாலிபர் உபவாசக் கூடுகை) நடத்தப்பட்டதில், சுமார் **8,911** வாலிபர்கள் கலந்து கொண்டு, தேசத்திற்காகவும், அழிந்து போகிற வாலிபர்களுக்காகவும், உத்திரவாதம் எடுத்து ஜெபிக்கும் ஜெப வீரர்களாக தங்களை அர்ப்பணித்துள்ளனர்.

பள்ளிகள், கல்லூரிகள், திருச்சபைகள் மற்றும் விடுதிகளிலுமாக, **'இயேசுவின் நண்பன்!'** என்கிற **288 ஜெபக் குழுக்கள்** உருவாக்கப்பட்டு, ஒவ்வொரு வாரமும், சுமார் **1,213** வாலிபர்கள் ஜெபித்து வருகிறார்கள். ஆத்தும பாரத்தோடு ஊழியம் செய்ய, சுமார் **1,092** வாலிபர்கள் **'சேனை!'** தலைமைத்துவப் பயிற்சி முகாமின் மூலமாகப் பயிற்றுவிக்கப்பட்டார்கள். 10 லட்சம் ஆத்துமாக்களை சந்திக்கிற ஜெப திட்டத்தில், சுமார் **1,08,425:00** மணி நேரங்கள் ஜெபம் ஏறெடுக்கப்பட்டுள்ளது.


வாலிபர் கொண்டாட்டம் - நாலுமாவடி

**'வாலிபர் உலகம்!'** என்கிற மாதாந்திரப் பத்திரிக்கையின் மூலமாக, சுமார் **15,000** வாலிபர்களுக்கு பின்தொடர் ஊழியம் செய்ய கர்த்தர் கிருபை செய்தார். **'வாலிபர் உலகம்!' தொலைக்காட்சி நிகழ்ச்சி**யின் மூலமாக, அனேக வாலிபர்கள், தங்கள் விசுவாச வாழ்க்கையில் புது நம்பிக்கையையும், புது உற்சாகத்தையும் பெற்றுக் கொண்டார்கள். கடந்த ஆண்டு முழுவதுமாக, சுமார் **1,40,248** வாலிபர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கவும், சுமார் **31,926** வாலிபர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளவும் கர்த்தர் கிருபை செய்தார்.

**உங்கள் பகுதியில் வாலிபர்கள் மத்தியில் ஊழியம் செய்ய விரும்பினால், 98403 97736, அல்லது 97914 44788 என்கிற இந்த எண்களில் தொடர்பு கொள்ளலாம்.**

## கடித ஊழியம்!

சுமார் **1,69,790** பேர்கள் **கடிதங்கள்** மூலமாகவும், சுமார் **2,70,750** பேர்கள் **தொலைபேசி** மூலமாகவும், சுமார் **40,440** பேர்கள், E-mail மூலமாகவும், சுமார் **25,550** பேர்கள் SMS மூலமாகவும் தொடர்பு கொண்டு, ஜெபிக்கக் கேட்டுக் கொண்டார்கள். சுமார் **9,000** பேர்கள் நமது **ஆலோசனை ஜெப மையத்திற்கு** நேரில் வந்து, ஜெபித்து ஆசீர்வதிக்கப்பட்டார்கள். நடைபெற்ற எல்லா **திறப்பின் வாசல் ஜெபத்தில்** கலந்து கொண்டவர்களில், சுமார் **1,61,000** பேர்கள் ஜெப விண்ணப்பங்களை எழுதிக் கொடுத்திருந்தார்கள். நமது **கிளை அலுவலகங்கள்** மூலமாக, சுமார் **21,000** பேர்களும், நடைபெற்ற **பெண்கள் புது வாழ்வு முகாம்**கள் மூலமாக, சுமார் **1,300** பேர்களும் ஜெபக் குறிப்புகளை எழுதிக் கொடுத்து, ஜெபித்து ஆசீர்வாதத்தைப் பெற்றார்கள்.

## பத்திரிக்கை ஊழியம்!

கடந்த வருடத்தில், **7 மொழிகளில்** (**தமிழ், ஆங்கிலம், இந்தி, கன்னடம், மலையாளம், தெலுங்கு, சிங்களம்**) வெளியிடப்பட்ட நமது பத்திரிக்கைகள் மூலமாக, இந்தியா மற்றும் **50** வெளி நாடுகளிலுமாக, சுமார் **3,57,125**க்கும் அதிகமான குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்பட்டன. இந்தப் பத்திரிக்கை ஊழியத்தின் மூலமாக கர்த்தர் எழுப்பிய சாட்சிகள் ஏராளம்! ஒவ்வொரு மாதமும் இந்தப் பத்திரிக்கை ஊழியத்திற்கான அனைத்துத் தேவைகளையும் கர்த்தர் மிக அற்புதமாக சந்தித்துக் கொடுத்தார்.

## இணைய தள ஊழியம்!

கடந்த வருடம் முழுவதும், நமது இணைய தளத்தின் மூலமாக (URL: www.jesusredeems.com) சுமார் **12,21,917** பேர்கள் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். சுமார் **7,83,562** பேர்கள் அனுதின வாக்குத்தத்த வசனத்தின் மூலமாகவும், சுமார் **2,16,269** பேர்கள் நமது **E-Magazine** மூலமாகவும், சுமார் **48,566** பேர்கள் **Android Apps** மூலமாகவும், சுமார் **2,170** பேர்கள் **Apple iOS Apps** மூலமாகவும் ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

மேலும், சுமார் **539** பேர்கள் **Online** மூலமாக **குடும்ப ஆசீர்வாதத் திட்டத்திலும்**, சுமார் **432** பேர்கள் சிறுவர்களுக்கான **'இயேசுவின் கண்மணிகள்!'** திட்டத்திலும், சுமார் **341** பேர்கள் வாலிபர்களுக்கான **'இயேசுவின் சிநேகிதன்!'** திட்டத்திலும் இணைந்து ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

கடந்த வருடத்தில் நடைபெற்ற **40 நாட்கள் ஜெப யாத்திரை, 12 மணி உபவாச ஜெபங்கள், விடுதலைப் பெருவிழாக்கள்** போன்ற கூட்டங்கள் உலகமெங்கும் **நேரடி ஒளிபரப்பு (Live)** செய்யப்பட்டது.

தேவ பிள்ளைகளே, நமது **'இயேசு விடுவிக்கிறார்'** பத்திரிக்கையை புதிதாகப் பதிவு செய்யவும், முகவரி மாற்றம் செய்யவும், காணிக்கை அனுப்பவும், எமது வெளியீடுகளை பெறவும், **'JR Online Portal'** என்கிற இந்த இணைய தளத்தை பயன்படுத்திக் கொள்ளுங்கள். **(URL: http://online.jesusredeems.com)**

**எமது சமூக வலை தளங்களில் இணைந்து கொள்ளுங்கள்.**

**https://www.facebook.com/JesusRedeemsMinistry**
**https://www.twitter.com/mohanlazarus/**
**https://www.youtube.com/user/jrwebtv1**

## ஒலி-ஒளி நாடா ஊழியம்!

சுமார் **38,000**க்கும் அதிகமான **பாடல் DVD, ACD** மற்றும் **MP3**க்களும், **தேவ செய்திகள்** அடங்கிய சுமார் **1,34,000**க்கும் அதிகமான **DVD**க்களும், **நாடகங்கள், பட்டிமன்றங்கள், Teli Serial**கள் அடங்கிய சுமார் **67,000**க்கும் அதிகமான **VCD** மற்றும் **DVD**க்களும் வினியோகம் செய்யப்பட்டது.

மட்டுமல்ல, **தமிழ், ஆங்கிலம், கன்னடம், இந்தி, தெலுங்கு** ஆகிய மொழிகளில், சுமார் **1,44,800**க்கும் அதிகமான **ஆவிக்குரிய புத்தகங்கள்** வினியோகம் செய்யப்பட்டன. மேலும், சுமார் **70,000**க்கும் அதிகமான **பெரிய மற்றும் சிறிய பாடல் புத்தகங்கள்** வினியோகம் செய்யப்பட்டன. சுமார் **28,750** பரிசுத்த **வேதாகமங்கள்** வினியோகம் செய்யப்பட்டது. **50,000** வாக்குத்தத்தக் **காலண்டர்**கள் மற்றும் **2,500 டைரி**கள் வினியோகம் செய்யப்பட்டது.

மேலும், **நாலுமாவடி, கோயம்புத்தூர், பாண்டிச்சேரி, திசையன்விளை, திருநெல்வேலி, நாகர்கோவில், மார்த்தாண்டம், திருவண்ணாமலை, திருச்சி, மதுரை, தஞ்சாவூர், திருப்பூர்** ஆகிய 12 இடங்களில், **"வேதாகமப் புத்தகக் கண்காட்சி"** நடத்தவும், இந்த ஊழியத்தின் மூலமாக, லட்சக்கணக்கான இயேசு கிறிஸ்துவை அறியாத ஜனங்கள் ஆசீர்வதிக்கப்படவும், சுவிசேஷம் அறிவிக்கவும் கர்த்தர் கிருபை பாராட்டினார்.

## சமுதாயப் பணிகள்!

நமது **'இயேசு விடுவிக்கிறார்'**-புது வாழ்வு சங்கத்தின் மூலமாக, ஏழை-எளிய மக்களுக்கு **தினந்தோறும் இலவச மருத்துவ சேவை** செய்யப்பட்டது. இதன் மூலமாக, சுமார் **14,000**க்கும் அதிகமான மக்கள் பயனடைந்தார்கள். வருகிற மக்களுக்கு மருத்துவ சேவை அளிப்பதோடு நின்று விடாமல், இயேசு கிறிஸ்துவின் அன்பும் சொல்லப்பட்டது.



சமுதாயப் பணிகள் - கடலூர்

**கடலூர், கள்ளத்திக்குளம்** மற்றும் **விளாத்திகுளம்** ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட, மொத்தம் 6 **இலவச மருத்துவ முகாம்**களின் மூலமாக, சுமார் **979** பேர் பயனடைந்தார்கள். நாலுமாவடியில் நடத்தப்பட்ட 5 **இலவச கண் சிகிச்சை முகாம்**களின் மூலமாக, **243** பேர் பயனடைந்தார்கள். ஒவ்வொரு மாதமும், முதல் சனிக்கிழமை தோறும் நமது புது வாழ்வு சங்கமும், திலி.-அகர்வால் கண் மருத்துவமனையும் இணைந்து நடத்துகிற இலவச கண் மருத்துவ முகாமின் மூலமாக **20** பேர் பயனடைந்தார்கள்.

**வெள்ளிக் கிழமைதோறும்** நாலுமாவடியில் நடைபெற்று வருகிற **இலவச மருத்துவ முகாமின்** மூலமாக, சுமார் **4,280**க்கும் அதிகமான ஏழை மக்கள் பயனடைந்தார்கள்.

கர்த்தருடைய சித்தத்தின்படியே, **புது வாழ்வு பல்நோக்கு மருத்துவமனைக்கான அடிக்கல்** நாட்டப்படவும், அதன் கட்டுமானப் பணிகளை

ஆரம்பிக்கவும் கர்த்தர் கிருபை செய்தார். மேலும், தகுதியுள்ள ஏழைப் பிள்ளைகளை தேர்ந்தெடுத்து, சுமார் ₹ **52,30,000** செலவில், அவர்களுக்கு **உயர்நிலை, மேல்நிலை, செவிலியர், மருத்துவம், பொறியியல், ஆசிரியர் பயிற்சி, தொழில் கல்வி**க்கான உதவிகள் மற்றும் ஏழைப் பெண்களுக்கான **திருமண** உதவிகள் செய்யப்பட்டது. கிராமங்களிலுள்ள படிக்கிற ஏழைப் பிள்ளைகளுக்கு New Life Academy மூலமாக, மிகக் குறைந்த கட்டணத்தில், உயர்தர Computer Education கற்றுக் கொடுக்கப்பட்டது.

இந்த ஊழியங்களுக்காக நன்கொடை அனுப்ப ஏவப்படுகிறவர்கள், **890 838 5315** என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொள்ளலாம். உங்கள் நன்கொடைகளுக்கு, 80Gயின் **வருமான வரி விலக்கு உண்டு.**

## நல்ல சமாரியன் கிளப்!

**நல்ல சமாரியன் கிளப்** மூலமாக, **மும்பை, புதுக்கோட்டை, காரைக்குடி, சேலம், திருச்சி,** கன்னியாகுமரி-**கொட்டாரம்** ஆகிய 6 இடங்களில் **புதிதாக கிளப்** தொடங்கவும், மாதாந்திரக் **குடும்பக் கூடுகை** நடத்தி, ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டிருக்கிற 21 கிளப்களை உற்சாகப்படுத்தவும் கர்த்தர் உதவி செய்தார்.

**தூத்துக்குடி, நாகர்கோவில், திருநெல்வேலி, மதுரை, கன்னிராஜபுரம்** ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட Christmas Program மூலமாக, **அனாதைப் பிள்ளை**கள், **கண் பார்வையற்றோர், ஏழை-எளியோர், முதியோர்** மற்றும் **விதவைகள்** போன்ற தேவையுள்ள மக்களுக்கு, **இலவச மருத்து சிகிச்சை** அளித்ததோடு, **கல்விக்கான உதவிகள், 3 சக்கர வாகனங்கள், தையல் இயந்திரங்கள்** போன்ற பல உதவிகளைச் செய்து, இயேசு கிறிஸ்துவின் அன்பை அவர்களுக்கு வெளிப்படுத்த கர்த்தர் கிருபை கொடுத்தார்.

மேலும், எல்லா கிளப்களும் இணைந்து, தேனியைச் சேர்ந்த **T. உதய கார்த்திகா** என்கிற ஒரு சகோதரிக்கு, **விண்வெளி ஆய்வுப் பொறியாளர்** (Aero Space Engineering) **படிப்பிற்கான உதவித் தொகையைக் கொடுத்து** உதவவும், கர்த்தர் உதவி செய்தார்.

இந்த ஊழியங்களுக்காக ஜெபித்தும், கொடுத்தும் தாங்கி வருகிற ஒவ்வொருவருக்கும், இந்த ஊழியத்தின் ஆசீர்வாதங்களில், நிச்சயமாகவே ஒரு பெரிய பங்கை கர்த்தர் வைத்திருக்கிறார். இந்த ஊழியத்திற்கான விலையேறப் பெற்ற உங்கள் ஜெபத்தை இன்னும் அதிகமாக எதிர்பார்க்கிறேன்.

மட்டுமல்ல, கர்த்தருடைய இந்த ஊழியத்தை, ஏவப்படுகிறபடியே கொடுத்துத் தாங்குங்கள். நானும், நமது 'இயேசு விடுவிக்கிறார்' ஊழியக் குடும்பத்தினரும் உங்களுக்காக தொடர்ந்து ஜெபிக்கிறோம். கடந்த வருடம் முழுவதும் இந்த ஊழியத்தை ஜெபத்தினாலும், பொருளுதவினாலும் தாங்கிய ஒவ்வொருவருக்கும்,



**இயேசு கிறிஸ்துவின் நாமத்தில்,**

**மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

- உங்கள் சகோதரன்.

# 2017-ல் இலங்கையில் நடைபெறவிருக்கிற

## 'இயேசு விடுவிக்கிறார்' ஊழியங்கள்!

| 3 நாட்கள் திறப்பின் வாசல் உபவாச ஜெபம்! | 9 மணி நேர திறப்பின் வாசல் உபவாச ஜெபம்! | 3 நாட்கள் விடுதலை பெருவிழா! |
|---|---|---|
| **ஜூன் 1, 2, 3.** | **ஜூன் 6** | **ஜூன் 9, 10, 11.** |
| இடம்: **மட்டக்களப்பு.** | இடம்: **மன்னார்.** | இடம்: **அம்பாறை.** |

# ஜெபியுங்கள்.... ஆயத்தப்படுங்கள்!

Before the End...

# முடிவுக்கு முன்...



சிறப்புச் செய்தி:
**சகோ. வின்சென்ட் செல்வக்குமார்,**
(இயேசுவின் தொனி ஊழியங்கள், இராமநாதபுரம்.)

**கடந்த 2016 டிசம்பர் மாத இதழில் கடைசியாக, "கர்த்தருடைய இரகசிய வருகைக்கும், இரண்டாம் வருகைக்கும் இடைப்பட்ட காலத்தில், மரித்த பரிசுத்தவான்களின் கல்லறைகளும் திறக்கப்பட்டு, அவர்களுடைய சரீரங்களும் உயிர்த்தெழும். அவர்களும் மறுரூபமாக்கப்பட்டு, எடுத்துக் கொள்ளப்படுவார்கள்." என்பதாக வாசித்து முடித்திருந்தோம் அல்லவா?**

**அதன் தொடர்ச்சி இதோ...**

கர்த்தருடைய பிள்ளைகள் பரலோகத்திற்குள் எடுத்துக் கொள்ளப்படுகிற இந்தச் சம்பவம் நிறைவேறிய பின்பு, எல்லோருடைய கண்களும் காணும்படியாக, வானம் திறக்கப்படும். திறக்கப்பட்ட வானத்திலிருந்து வெள்ளைக் குதிரையில் ஏறி வருகிறவராக, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து புறப்படுவார். அவருடைய கண்கள் அக்கினியைப் போல காணப்படும். அவருடைய சிரசில் அனேகக் கிரீடங்கள் காணப்படும். அவருடைய வஸ்திரத்தில் இரத்தம் தோய்ந்த அடையாளம் இருக்கும்.

அவரைப் பின் தொடர்ந்து, ஏராளமான யுத்தப் புருஷர்கள் வெள்ளைக் குதிரைகளில் ஏறியவர்களாக யுத்தத்திற்குப் புறப்படுவார்கள். அவர்கள் யாவரும் சுத்தமும், வெண்மையுமான வஸ்திரத்தைத் தரித்திருப்பார்கள்.

கர்த்தர் அந்திக் கிறிஸ்துவோடும், அவனுடைய சேனைகளோடும் யுத்தம் செய்வார். அவருடைய வாயிலிருந்து அவர்களை வெட்டும்படியான பட்டயங்கள் புறப்படும். அந்தப் பட்டயம், இதுவரை உலகம் பயன்படுத்திய எந்தப் பட்டயத்தை விடவும் மிகக் கூர்மையானதாகவும், நாலா திசைகளிலும் சூழல்கிறதாகவும், தன் சத்துருக்களை தப்ப விடாததாகவும் இருக்கும். அது சத்துருக்களைத் தொடர்ந்து தேடிப் பிடித்து, அவர்களை அழிக்கும்.

யுத்தம் துவங்கிய அந்த சமயத்தில், ஒரு தூதன் சூரியனில் வந்து நிற்பான். அங்கிருந்து அவன், வானத்தில் பறக்கிற சகல பட்சிகளையும் பார்த்து: "நீங்கள் ராஜாக்களின் மாம்சத்தையும், சேனைத் தலைவர்களின் மாம்சத்தையும், பலவான்களின் மாம்சத்தையும், குதிரைகளின் மாம்சத்தையும், அவைகளின் மேல் ஏறியிருக்கிறவர்களின் மாம்சத்தையும், சுயாதீனர், அடிமைகள், சிறியோர், பெரியோர் போன்ற எல்லோருடைய மாம்சத்தையும் பட்சிக்கும்படியாக, மகா தேவன் கொடுக்கிற விருந்துக்குக் கூடி வாருங்கள்..." என்று உரத்த சத்தத்தோடு அழைப்புக் கொடுப்பான்.

கர்த்தர் தாமே தங்களுக்கு விரோதமாக யுத்தம் செய்ய இறங்கி வருந்திருக்கிறார் என்பதை அறிந்து, அந்திக் கிறிஸ்து அவரை எதிர்க்கும்படியாக தன்னுடைய கையின் கீழ்படிந்த பூமியின் ராஜாக்களை எல்லாம் ஒன்று திரட்டிக் கொண்டு, அவரோடு யுத்தம் பண்ணும்படியாக எதிர்த்து வருவான். அந்த யுத்தத்தின் முடிவில், அந்திக் கிறிஸ்து பிடிக்கப்படுவான்! அவனுடனே கூட, தன்னுடைய பொய்யான அற்புதங்களினாலும், அடையாளங்களினாலும் ஜனங்களை மோசம் போக்கிக் கொண்டிருந்த கள்ளத் தீர்க்கதரிசியும் பிடிக்கப்பட்டு, இருவரும் அக்கினியும், கந்தகமும் எரிகிற அக்கினிக் கடலிலே தள்ளப்படுவார்கள்.



அதைத் தொடர்ந்து, அந்திக் கிறிஸ்துவைப் பின்பற்றி, தேவனோடு யுத்தம் செய்யப் புறப்பட்ட ஏனைய சேனைகள் அவருடைய வாயிலிருந்து புறப்படுகிற பட்டயத்தினால் கொல்லப்படுவார்கள். அவர்களுடைய சடலங்கள் தரையிலே வீசியெறியப்படும். அவர்களுடைய மாம்சத்தை பறவைகள் பட்சித்துப் போடும்.

அப்பொழுது, பரலோகத்திலிருந்து ஒரு தூதன், தன் கைகளில் மிகப் பெரிய சங்கிலியைப் பிடித்தவனாக இறங்கி வருவான். பரலோகத்தின் சங்கிலியானது, சாத்தானையும், அவனுடைய கிரியைகளையும் கட்டிப் போடப் போதுமானதும், வலிமையானதுமாக இருக்கும். அந்தச் சங்கிலி சாத்தானுக்காகவே பிரத்தியேகமாகப் படைக்கப்பட்டு, பரலோகத்தின் தூதர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

சாத்தானையும், அவனுடைய தூதர்களையும் யுத்தத்தில் ஜெயித்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, சாத்தானை அந்தப் பிரத்தியேகமான சங்கிலியினால் கட்டி, பாதாளத்தின் தண்டனைக் களத்திலே காவலில் வைப்பார். அவன் அங்கே எந்த விதமான கிரியைகளையும் செய்ய முடியாமல், ஆயிரம் வருடமளவும் வாதிக்கப்படுவான்.

அந்த ஆயிரம் வருடக் காலத்தில், சாத்தானின் செயல்பாடுகளை வானத்திலும், பூமியிலும் எங்கும் காணவே முடியாது. சாத்தான் இல்லாத ஒரு பரிசுத்தமான சூழ்நிலை எல்லா இடங்களிலும் நிலவும். **(வெளி. 20:1,2).**

இந்த ஆயிரம் வருடக் கால அளவும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய இராஜ்ஜியத்தை இந்த பூமியிலே நிறுவுவார். இயேசு கிறிஸ்து ஆளுகை செய்யும் இந்த ஆயிரம் வருடமும், சமாதானத்தினால் பூமி நிறைந்திருக்கும். எங்கும் மகிழ்ச்சியும், சந்தோஷமும் பெருகி இருக்கும்.

அந்நாட்களில், கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் மலைகளின் சிகரங்களில் ஸ்தாபிக்கப்படும். அது மலைகளுக்கு மேலாக உயர்த்தப்பட்டிருக்கும். யூதர்கள் மாத்திரமல்ல, பூமியின் ஜனங்கள் யாவரும் அந்த மகிமையான ஆலயத்துக்கு வருவார்கள்.

அந்த ஆலயம், பரலோகத்தின் தேவாலயத்தின் மகிமைக்கு ஒப்பான மகிமையை உடையதாக இருக்கும். அப்பொழுது, சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தருடைய வார்த்தையும் புறப்படும். காரணம், கர்த்தராகிய கிறிஸ்துவின் சிங்காசனம் அப்போது எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும். ராஜாவின் அரண்மனை அங்கே இருக்கும். எருசலேம் மகா ராஜாவின் நகரமாக இருக்கும்.

அவருடைய ஆட்சியில், யுத்த ஆயுதங்களுக்கு வேலையில்லாமல் போய் விடும். எனவே, பட்டயங்கள் மண் வெட்டிகளாகவும், ஈட்டிகள் அரிவாள்களாகவும் அடிக்கப்படும்.

ஜனங்களில் எந்த விதமான பேதங்களும் இல்லாமல் போய் விடும். அவர்கள் ஒருவருக்கொருவர் விரோதமாக கலகங்கள் செய்வதில்லை. யுத்தத்தைக் கற்றுக் கொள்கிறவர்களும், கற்பிக்கிறவர்களும் இருப்பதில்லை. ஆக்கப் பூர்வமான பணிகள் மாத்திரமே நடைபெறும். **(மீகா 4:1-7).**

## இதுவே முடிவு!

இந்த ஆயிரம் வருட காலத்துக்குப் பிறகு, சாத்தான் விடுதலையாக்கப்படுவதும், அதன் பின்பு கொஞ்சக் காலம் மறுபடியும் ஜனங்களை அவன் வஞ்சிக்கத் துவங்குவதும், கர்த்தர் மறுபடியும் ஒரு மகாப் பெரிய யுத்தத்தில் அவனை எதிர்த்து, அவனைப் பூரணமாக ஜெயிப்பதும், அதற்குப் பின்பாக கர்த்தர் எல்லா ஜனங்களையும் நியாயந் தீர்ப்பதும், சாத்தானையும், அவனுடைய தூதர்களையும் நிரந்தரமாக பாதாளத்தின் அக்கினிக் கடலில் பங்கடையச் செய்வதும், அதற்குப் பின்பாக இப்போது காணப்படுகிற இந்த உலகத்தை முற்றிலுமாக நெருப்பினால் அழித்து விட்டு, அதன் பின்பு புதிய வானத்தையும், புதிய பூமியையும் உருவாக்குவதையும் பற்றிய காரியங்கள் நிறைவேற வேண்டியதாக இருந்தாலும், சாத்தானின் ஆட்சியை நீக்கி, ஆயிரம் வருடம் தன்னுடைய ஆளுகையை பூமியில் நிறுவுவது வரைக்குமான காரியத்தையே சீஷர்கள் 'முடிவுக் காலம்!' என்று குறிப்பிட்டு, கேள்வி கேட்டார்கள். **(மத்தேயு 24:3).**



'உலகத்தின் முடிவு!' என்று அழைக்கப்படுகிற இந்த நிகழ்வுகளை நோக்கித்தான், இன்றைக்கு உலகத்தின் ஒவ்வொரு நிகழ்ச்சிகளுமே பயணித்துக் கொண்டிருக்கின்றன.

இன்றைக்கு உலகத்தில் நடைபெறுகிற எந்தவொரு நிகழ்ச்சியையும் கவனித்துப் பார்ப்பீர்களேயானால், அது நாம் மேற்சொன்ன முடிவுக் கால நிகழ்ச்சிகளை நோக்கியே நடைபெறுகிறதாகவே இருக்கும்.

முடிவுக் காலத்துக்கு முன்பாக நடைபெறும் ஆயத்த நிகழ்ச்சிகளில், ஒன்றிரண்டைத்தான் இந்தப் புத்தகத்தில் நான் உங்களுக்குக் காண்பித்திருக்கிறேன். அவைகள் மாத்திரமல்ல, நம்மைச் சுற்றிலும் நடைபெறுகிற ஒவ்வொரு நிகழ்வுகளுமே ஒட்டு மொத்த உலகத்தின் முடிவுக்கான ஆயத்தங்களாகவே இருப்பதை நுணுக்கமாகக் கவனித்தால் கண்டு கொள்ளலாம்.

அவற்றைக் கண்டு கொள்ள ஆரம்பித்தால், **"இனி விற்பதற்கும், கொள்வதற்கும், பெண் கொள்வதற்கும், பெண் கொடுப்பதற்கும் காலம் இல்லை."** என்று புரிந்து கொள்வீர்கள்.

**"திராட்சைத் தோட்டங்களை நிறுவவும், கட்டவும் இது சமயமில்லை."** என்பதை உணர்ந்து கொள்வீர்கள்.

**"வாதங்கள் புரியவும், விவாதங்கள் செய்யவும், ஒருவரை ஒருவர் குற்றம் சொல்லிக் கொண்டு, காலத்தைக் கடத்தவும் இது காலமல்ல."** என்பதையும் விளங்கிக் கொள்வீர்கள்.

நமக்குக் கிடைத்திருக்கும் இந்த நாட்களின் ஒவ்வொரு வினாடித் துளியும் எத்தனை விலையேறப் பெற்றது என்பதை அறிந்து கொள்வீர்கள்.

கர்த்தருடைய வருகைக்காக ஆயத்தப்படவும், மற்றவர்களை ஆயத்தப்படுத்தவும் தீவிரமாக எழும்புவீர்கள். "அதற்கான வழிகள் என்னென்ன?" என்பதைக் குறித்து திட்டம் செய்வீர்கள்.

உங்கள் முயற்சிகளுக்கு கர்த்தர் உதவி செய்வார். கடைசிக் கால அபிஷேகத்தினால் கர்த்தர் உங்களை நிரப்பி, வருகையின் கால உபத்திரவங்களிலிருந்து நீங்கள் தப்பவும், தமக்கு முன்பாக நீங்கள் கூட்டிச் சேர்க்கப்பட்டவர்களாக வந்து நிற்கவும் உதவுவார். அதன் பிறகு, நீங்கள் வருகையைக் குறித்து பயப்படுகிறவர்களாக அல்ல, அதை எதிர்பார்க்கிறவர்களாக மாறி விடுவீர்கள்.

**– மாராநாதா!**
**ஆமென்!**
**கர்த்தராகிய இயேசுவே வாரும்!**

**– முற்றும்.**



## கொழும்பு-திறப்பின் வாசல் ஜெபத்தில் இறங்கிய

# ஆவியானவரின் ஆசீர்வாதமான அருள் மழை!



நம் கர்த்தர் ஜெபத்தைக் கேட்கிறவர் என்பதற்கு சாட்சியாக ஒவ்வொரு மாதமும் நாம் நடத்தி வரும் திறப்பின் வாசல் ஜெபத்தின் மூலம் தேவன் கிரியை செய்து வருகிறார்.

காலி முக வீதியில் உள்ள கிறிஸ்து நாதர் ஆலய மண்டபத்தில் டிசம்பர் மாதம் 3ம் தேதி நடைபெற்ற திறப்பின் வாசல் ஜெபத்தில் பல சபைகளைச் சேர்ந்த சுமார் 225 பேர் மற்றும் 14 போதகர்கள் கலந்து கொண்டு தேசத்திற்காகவும், திருச்சபைகளின் ஆசீர்வாதங்களுக்காகவும் ஜெபித்தனர்.

'இயேசு நம்மோடு' சபையின் போதகர் அஜித் அவர்கள் பாடல் மற்றும் ஆராதனை வேளைகளை நடத்த சகோ. R. ஜெபசிங் அவர்கள் தேசத்தின் பல முக்கியமான காரியங்களுக்காக பகிர்ந்து கொண்டு ஜெபங்களை ஏறெடுத்தபொழுது தேவ ஜனங்கள் கண்ணீரோடு மன்றாடினர்.

தொடர்ந்து, சகோ. சாமுவேல் மோகன்ராஜ் அவர்கள் (Showers of Blessing Ministries, USA) ஆசீர்வாத அக்கினி என்ற தலைப்பில் ஆவியானவரைக்குறித்த தேவ சத்தியங்களை விளக்கமாக செய்தியாக அளித்து ஜெபித்தபோது தேவ ஜனங்கள் தேவ வல்லமையினால் ஆட்கொள்ளப்பட்டு அளவில்லாத அபிஷேகத்தால் நிறப்பப்பட்டனர். ஆவியானவர் அநேகரை விடுவித்து சாட்சியாக நிறுத்தினார். சகோ. டோனி அவர்கள் செய்திகளை சிங்களமொழியில் மொழியாக்கம் செய்ய 'இயேசு விடுவிக்கிறார்' இலங்கை ஊழியப் பொறுப்பாளர்கள் மற்றும் ஊழியர்கள் சிறப்பாக செய்திருந்தனர். தேவ நாமம் பலமாய் மகிமைப்பட்டது.


போதகர் அஜித்


சகோ. R. ஜெபசிங்


சகோ. சாமுவேல் மோகன்ராஜ்



## சிறையிருப்பை மாற்றினார்!

எனக்கு காலில் 8 மாத காலமாக காலில் ஒரு புண் குணமாகாமல் இருந்தது. மருந்துகள் எடுத்தும் குணமாகாமல் மிகுந்த வேதனையோடு 'இயேசு விடுவிக்கிறார்' கெத்சமனே ஜெப மையத்திற்கு கடிதம் மூலம் தொடர்பு கொண்டு ஜெபிக்கக் கேட்டுக் கொண்டேன். அவர்களும் ஜெபித்து வாக்குத்தத்தங்களுடன் பதில் கடிதம் அனுப்பியிருந்தார்கள். நானும் உபவாசத்துடன் வீட்டிலிருந்தே ஜெபித்தேன். தேவன் என் சிறையிருப்பை மாற்றினார். தற்சமயம் புண் நன்றாக காய்ந்து விட்டது. - விமலா, நீர்கொழும்பு.



## அற்புதம் செய்தார்!

எனது மகனுக்கு கடந்த 5 வருடகாலமாக தொழில் கிடைக்காமல் மிகவும் கஷ்டப்பட்டு கண்ணீரோடு இருந்த வேளை கடந்த மாத திறப்பின் வாசல் ஜெபத்தில் ஜெபம் செய்யுமாறு 'இயேசு விடுவிக்கிறார்' கெத்சமனே ஜெப மையத்திற்கு கடிதம் மூலம் தொடர்பு கொண்டு ஜெபிக்கக் கேட்டுக் கொண்டேன். அவர்களும் ஜெபித்து வாக்குத்தத்தங்களுடன் பதில் கடிதம் அனுப்பியிருந்தார்கள்.

அற்புதவிதமாக ஒரு மாதத்திற்குள்ளாக நல்ல சம்பளத்தோடு நல்லதொரு தொழில்வாய்ப்பை தேவன் கட்டளையிட்டார். - ஜெனி, நீர்கொழும்பு.

## தடைகள் மாறியது!

எனது மூத்த மகனுக்கு கடந்த ஐந்து வருடங்களாக திருமணங்கள் பேசப்பட்டு தடைப்பட்ட நிலையில் 2016 ஜனவரி மாதத்திலிருந்து நான் தொடர்ச்சியாக திறப்பின்வாசல் ஜெபத்தில் கலந்து கொண்டு ஜெபித்தேன்.

அற்புத விதமாக கடந்த மாதம் மகனுக்கு திருமணம் நிச்சயமானது. - வினிபிரீடா, மன்னார்.

கொழும்பில் இயேசு விடுவிக்கிறார்

# திறப்பின் வாசல் ஜெபம்!

நாள்: 2017 பிப்ரவரி 4
(சனிக்கிழமை)
நேரம்: காலை 9:00 - மதியம் 2:00.

இடம்: காலி முக கிறிஸ்து நாதர் ஆலய மண்டபம்,
*(Galle Face Christ Church Hall), Colombo - 03,*
*(Near The Ramada Hotel)*

தேவ செய்தியும், ஜெபமும்:

## Dr. R. அன்புராஜன்



தேசத்திற்காக ஜெபிக்கவும், புதிய ஆண்டின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் வாருங்கள்!

நேரில் வர முடியாதவர்கள், உங்கள் தனிப்பட்ட, குடும்ப மற்றும் ஆவிக்குரிய பிரச்சனைகளுக்காக ஜெபிக்க வேண்டுமானால், கடிதம் மூலமாகத் தெரியப்படுத்தலாம். உங்களுக்காக ஜெபித்து, கர்த்தர் கொடுக்கும் பதிலை உங்களுக்கு அனுப்புவோம்.

**கர்த்தர் உங்கள் சிறையிருப்பை மாற்றுவார்.**

முகவரி: 57/36A, P.O. 108, Thimbirigasyaya Road, Hendala, Wattala, SRILANKA.
Ph: 011-2930 152.

'இயேசு விடுவிக்கிறார்'
கெத்செமனே
ஜெப மையம்
GETHSEMANE
PRAYER CENTRE

## திருகோணமலையில்
## தேசத்திற்காக ஜெபிக்க...

# தேவன் தெரிந்து கொண்ட ஸ்தலம்!

இலங்கை தேசத்தின் ஆசீர்வாதங்களுக்காகவும் சமாதானமான சுகவாழ்வு வாழ்ந்து மக்கள் சுகித்திருக்கவும் பல ஆண்டுகளாக ஜெபித்து பிரயாசப்பட்டு வருகிறோம்.

அதன்படி வத்தளை மற்றும் கிளிநொச்சி பகுதிகளில் ஜெப மையங்கள் அமைத்து தினந்தோறும் தேசத்திற்காக ஜெபித்து வருகிறோம். அதன் தொடர்ச்சியாக திருகோணமலை பட்டணத்திலும் 'இயேசு விடுவிக்கிறார்' கெத்செமனே ஜெப மையம் ஒன்றை நிறுவ தேவன் வழிதிறந்துள்ளார்.

டிசம்பர் 4ம் தேதி மாலை 6 மணியளவில் திருகோணமலையிலுள்ள ஏராளமான போதகர்கள் மற்றும் தேவப் பிள்ளைகள் முன்னிலையில் சகோ. **சாமுவேல் மோகன்ராஜ்** அவர்கள் ஜெபித்து பிரதிஷ்டை செய்து திறந்து வைத்தார்கள்.



சகோ. **ஜெயக்குமார்** அவர்கள் பாடல் ஆராதனை வேளைகளை சிறப்பாக நடத்தினார்கள். திருகோணமலை போதகர் ஐக்கிய சங்க தலைவர் Pr. **ஜெயசந்திரன்** மற்றும் சகோ. **ஜெரோம் விக்னேஸ்வரன்** ஆகியோர் சிறப்புரையாற்றினார்.

மட்டக்களப்பிலிருந்து வந்திருந்த Pr. **குகன்** அவர்கள் தேசத்திற்காகவும், மூத்த போதகர் Pr. **அம்புரோஸ்** அவர்கள் திருகோணமலை மாவட்டத்துக்காகவும் சிறப்புப் பிரார்த்தனைகள் ஏறெடுத்தார்கள்.

சகோ. R. **ஜெபசிங்** அவர்கள் 'இயேசு விடுவிக்கிறார்' ஊழிய தரிசனம் கெத்செமனே ஜெப மையத்தின் நோக்கம் மற்றும் இதுவரை இலங்கை தேசத்தின் ஆசீர்வாதங்களுக்காகவும் நன்மைகளுக்காகவும் 'இயேசு விடுவிக்கிறார்'



சகோ. ஜெயக்குமார் | Pr. ஜெயசந்திரன் | சகோ. ஜெரோம் விக்னேஸ்வரன்



Pr. குகன் | Pr. அம்புரோஸ் | சகோ. அமுதன் | Fr. அசெங்க

ஊழியங்கள் மூலம் செய்து வந்த ஊழியங்களைக் குறித்து பகிர்ந்து கொண்ட பின்னர் சகோ. சாமுவேல் மோகன்ராஜ் அவர்கள் ஜெபத்தைக் குறித்து அளித்த தேவ செய்தி அனைவருக்கும் மிகுந்த பிரயோஜனமாயிருந்தது.



சகோ. சாமுவேல் மோகன்ராஜ்



இறுதியில் சகோ. அமுதன் அவர்கள் நன்றியுரையாற்ற Fr. **அசெங்க** அவர்கள் நிறைவு ஜெபம் ஏறெடுக்க கெத்செமனே ஜெப மைய திறப்பு விழா இனிதே நிறைவு பெற்றது. அனைத்து நிகழ்ச்சிகளையும் இயேசு விடுவிக்கிறார் இலங்கை ஊழிய பொறுப்பாளர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.





# தேசத்திற்காக ஜெபிக்க வாருங்கள்!

திருகோணமலையில் உள்ள நமது கெத்செமனே ஜெப மையத்திற்கு வந்து தேசத்திற்காகவும் உங்கள் ஆவிக்குரிய தனிப்பட்ட நலனுக்காக ஆலோசனை பெற்று ஜெபிக்கவும் தனியாக, குழுவாக, சபையாக, குடும்பமாக வரலாம். கர்த்தர் உங்கள் சிறையிருப்பை மாற்றுவார்!

முகவரி: 'இயேசு விடுவிக்கிறார்' **கெத்செமனே ஜெப மையம்**
இல.29, சுபமங்கள திருமண மண்டபம் முதல் தளம், ஹங்கிசன் தெரு, திருகோணமலை.
போன்: 071 0690909, 026 2221880.

## கிளிநொச்சி

இயேசு விடுவிக்கிறார்

**கெத்செமனே** ஜெப மையம்
**GETHSEMANE** PRAYER CENTRE

முகவரி: இல. 31, உதயநகர் கிழக்கு,
நாகதம்பிரான் கோவில் வீதி,
கிளிநொச்சி.
Ph: 021 - 2285 284.

அலுவலக நேரம் தினமும் காலை 9:00 - மாலை 7:00 மணிவரை.

### இங்கு நடைபெறும் ஊழியங்கள்!

**பெண்கள் ஜெபம்!**
(புதன்கிழமைதோறும்)
12:00 P.M. - 3:00 P.M.

**உபவாச ஜெபம்!**
(சனிக்கிழமைதோறும்)
9:00 A.M. - 12:00 Noon

**சினெர்ஜியா** வாலிபர் கூட்டம்!
(ஞாயிற்றுக்கிழமைதோறும்)
3:00 P.M. - 4:00 P.M.

**அற்புத விடுதலை பிரார்த்தனை!**
(ஒவ்வொரு மாதமும் 2வது சனிக்கிழமை)
5:00 P.M. - 7:00 P.M.

**முழு இரவு ஜெபம்**
(போயா நாளின் முந்தைய தினம்)
இரவு 10:00 P.M. - காலை 5:00 A.M.

## இலங்கை தேசத்தின் ஆசீர்வாதத்திற்காக ஜெபிக்க வாருங்கள்!

ஜெபியுங்கள்! வியாபாரம், தொழில் செய்கிறவர்களுக்காக,
நாலுமாவடியில்

# ஆசீர்வாத உபவாச ஜெபம்!

2017 மார்ச் 11.
சனிக்கிழமை.
காலை 9:00 - மாலை 3:00.
தேவனுடைய கூடாரம்,
நாலுமாவடி.





தேவ ஆலோசனைகளும், ஜெபங்களும்:
சகோ. மோகன் சி. லாசரஸ், சகோ. A. அப்பாத்துரை.

விபரங்களுக்கு: 'இயேசு விடுவிக்கிறார்', நாலுமாவடி-628 211, தூத்துக்குடி மாவட்டம், இந்தியா. (போன்: 04639-22 00 22).

"நன்மைசெய்யும்படி உனக்குத் திராணியிருக்கும்போது, அதைச் செய்யத் தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே." நீதி. 3:27.



# புது வாழ்வு பல்நோக்கு மருத்துவமனை!

## (New Life Multi Speciality Hospital)


'இயேசு விடுவிக்கிறார்' புது வாழ்வு சங்கம்-சமூக சேவைப் பிரிவு.

கர்த்தருடைய சித்தத்தின்படியே, **புது வாழ்வு பல்நோக்கு மருத்துவமனையின்** கட்டுமானப் பணிகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தற்சமயம் அஸ்திபாரம் போடுகிற பணிகள் முடிக்கப்பட்டு, **தூண்கள் எழுப்புகிற பணிகள்** நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதற்காக **ஜெபித்துக் கொள்ளுங்கள்.**

**ஒரு சதுர அடிக்கு 2,200 செலவாகும்.**
(மொத்த அளவு 28,000 சதுர அடி)

மட்டுமல்ல, "மொத்தம் 216 அறைகள் கட்டப்பட வேண்டும்." என்று தெரியப்படுத்தி இருந்த காரியத்தில், தற்போது 8 அறைகளைக் கட்டிக் கொடுப்பதற்காக, சில தேவ பிள்ளைகளை கர்த்தர் எழுப்பி இருக்கிறார். அவர்களுக்காக கர்த்தரைத் துதிக்கிறேன்!

**இன்னும் 210 அறைகள் கட்டப்பட வேண்டும். ஒரு அறை கட்டுவதற்கு ஆகும் செலவு ₹ 3 லட்சம்.**



நடைபெற்றுக் கொண்டிருக்கிற மருத்துவமனைக் கட்டுமானப் பணிகள்

## கொடுத்தேன், பெற்றுக் கொண்டேன்!



என் பேரன் **மூளைக் காய்ச்சலினால்** பாதிக்கப்பட்டு, **கைகளும், கால்களும் செயலிழந்து போய், நடக்க முடியாத நிலைமைக்குள்ளானான்.** எத்தனையோ மருத்துவமனைகளுக்குக் கொண்டு சென்று, அவனுடைய சிகிச்சைக்காக, சுமார் **₹ 10 லட்சம் வரை செலவு** செய்து பார்த்தோம். டாக்டர்கள், "என்னவென்றே எங்களால் கண்டுபிடிக்கவே முடியவில்லை. இனி எங்களால் ஒன்றும் செய்ய முடியாது." என்று சொல்லி விட்டார்கள்.

**தாங்க முடியாத மன வேதனையோடு** இருந்த சமயத்தில், திறப்பின் வாசல் ஜெபத்தில் கர்த்தர் செய்து வருகிற அற்புதங்களைக் குறித்துக் கேள்விப்பட்டு, அதில் கலந்து கொண்டேன். அப்போது, கட்டப்பட்டுக் கொண்டிருக்கிற புது வாழ்வு பல்நோக்கு **மருத்துவமனைக் கட்டிடத்திற்கென்று** கொடுக்கத் தீர்மானித்து, என்னால் முடிந்த ஒரு சிறிய காணிக்கையைச் செலுத்தி விட்டு, என் பேரனுடைய சுகத்திற்காக மிகுந்த கண்ணீரோடு ஜெபித்து விட்டு வந்தேன்.

கர்த்தர் என் பொருத்தனையை ஏற்றுக் கொண்டு, ஜெபத்தைக் கேட்டு, என் பேரனைக் **கை விடாமல்,** டாக்டர்களே ஆச்சரியப்படும்படியாக மிக அற்புதமான **சுகத்தை** அவனுக்குக் **கொடுத்து,** அவனுடைய **மரணப் படுக்கையை மாற்றி,** அவனையும் ஒரு சாட்சியாக வாழ வைத்திருக்கிறார். - **மல்லிகா, சங்கர்நகர்.**

கர்த்தர் உங்கள் உள்ளத்தில் **ஏவினால், நீங்களும் உதவலாம்.** ஏவப்படுகிறவர்கள், உங்கள் நன்கொடைகளை கீழ்கண்ட எமது வங்கிக் கணக்கில் **நேரடியாகவோ,** அல்லது **Cheque / DD** மூலமாகவோ, கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பலாம்.
- உங்கள் சகோதரன்.

### உங்கள் நன்கொடைகளை அனுப்ப...

| | |
|---|---|
| A/c Name: | Jesus Redeems Ministries - Sri Lanka, |
| A/c No: | 7010 1000 7680 |
| Bank Name: | Hatton National Bank PLC. |
| Branch: | Nawam Mawatha - Colombo -02. |
| Swift Code: | HBLILKLXXXX. |

**Contact: 57/36A, Thimbirigasyaya Road, Hendala, P.O. 108, Wattala, SRILANKA.**
***(Ph: 011 293 0152, 071 437 1111)***

# வத்தளையில்

## கெத்செமனே
ஜெப மையம்

GETHSEMANE
PRAYER CENTRE



**உங்கள் சிறையிருப்பு மாற வேண்டுமா?**

தேசத்திற்காக ஜெபிக்க வாருங்கள்!

**தனியாக... குழுவாக...சபையாக...ஜெபிக்கலாம்...**

தினமும் காலை 9 மணி
முதல் மாலை 6 மணிவரை

## நடைபெறும் ஊழிய விபரங்கள்

| | |
|---|---|
| **பெண்கள் ஜெபம்!**<br>(வியாழக்கிழமைதோறும்)<br>10:00 A.M. - 1:00 P.M. | **உபவாச ஜெபம்!**<br>(சனிக்கிழமைதோறும்)<br>10:00 A.M. - 1:00 P.M. |
| **குடும்ப ஆசீர்வாத கூடுகை!**<br>(ஒவ்வொரு மாதமும் போயா தினத்தன்று)<br>10:00 A.M. - 1:00 P.M. | **மாணவர்கள் கூடுகை!**<br>(3வது சனிக்கிழமைதோறும்)<br>4:00 P.M. - 5:00 P.M. |



சகோ. மோகன் சி லாசரஸ் அவர்களின் செய்திகள்
அடங்கிய சி.டி.க்கள் புத்தகங்கள் கிடைக்கும்.

**கிளை அலுவலக முகவரி: *57/36A, P.O. 108, Thimbirigasyaya Road, Hendala, Wattala, SRILANKA.***

உங்கள் அவசர **ஜெப அழைப்பிற்கு 011 - 2930 152, 071 437 1111** என்ற எண்ணிற்குத் தொடர்பு கொள்ளவும்.

## காணிக்கை அனுப்புவோர் கவனத்திற்கு ...

இயேசு விடுவிக்கிறார் ஊழியத்திற்காக, பத்திரிக்கை மற்றும் தொலைக்காட்சி ஊழியத்திற்காகக் கொடுத்து தாங்க விரும்புகிறவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் உங்கள் காணிக்கைளை செலுத்தி, தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**முக்கிய குறிப்பு :**

நீங்கள் காணிக்கை செலுத்திய பின்னர் நீங்கள் செலுத்தியத்திற்கான வங்கி சீட்டினையும், எந்த ஊழியத்திற்காக அனுப்பினீர்கள் என்ற விபரத்தையும், உங்களது முழு முகவரியுடன் எங்களுக்கு அனுப்பி வையுங்கள். அல்லது தொலைப்பேசி மூலம் எங்களுக்கு தெரியப்படுத்தலாம். உங்களுக்காக ஜெபித்து, பதில் எழுத அது ஏதுவாயிருக்கும்.



A/C Name : Jesus Redeems Ministries
Sri Lanka, A/C No. 7010 1000 7680
Bank : Hatton National Bank
PLC. Branch : Nawam Mawatha - Colombo - 02.
Swift Code : HBLILKLXXXX

# காணத் தவறாதீர்கள்!

## *தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்!*



**ஏஞ்சல் டி.வியில்** (சனிக்கிழமை தவிர) **தினமும் காலை 7:30 - 8:00, இரவு 11:30-12:00.**

**செவ்வாய் கிழமைதோறும் காலை 10:00 - 10:30.**

**வியாழக் கிழமைதோறும் இரவு 9:00 - 9:30.**

**சனிக் கிழமைதோறும் மதியம் 2:30 - 3:00.**

Angel tv

**சுவர்க டி.வியில்** ஞாயிறு முதல் வெள்ளி வரை காலை 7:30 - 8:00 மணிவரை.

பாடல்கள், நாடகங்கள், சாட்சிகள் மற்றும் பல... ஞாயிறு முதல் வெள்ளி வரை காலை 7:30 - 8:00 மணிவரை.

LBM TV

**Dialog TVயில்** (God Channel) ஞாயிறு முதல் வெள்ளி வரை காலை 7:30 - 8:00 மணிவரை.



**சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்களின் தேவ செய்திகளைக் கேட்டு, *ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்!***

PRINTED BY S. A. PRINTERS, 57/3, LOTUS GROVE, THIMBIRIGASYAYE, HENDALA
Registered in the Department of Posts of Sri Lanka under QD/102/News/2016